தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**10.07.2013**

**5000 பண்ணைக் குட்டைகள் அமைக்க நிதி ஒதுக்கீடு**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட பழங்குடியினர் சிறு, குறு விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைப்பது தொடர்பான ஆய்வுக் கூட்டம், விழுப்புரத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர், சிறு, குறு விவசாயிகளின் நிலங்களில் அவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தொழிலாளர்களை பயன்படுத்தி பண்ணைக் குட்டைகள் அமைக்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும் வகையிலும் விவசாயிகளின் நிலங்களில் நிலத்தடி நீர் தட்டுப்பாட்டினை தணிக்கும் பொருட்டும், உள்ளூர் நீர்பிடிப்பு பகுதிகளில் அதிக அளவு நீரை சேகரிக்கும் பொருட்டும், நிலத்தடி நீரை சுத்திகரித்து கசிவுத் திறனை அதிகரித்து மழையில்லாத காலங்களில் பண்ணைக் குட்டைகளில் தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்யவும் வழியுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு, குறு விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைக்க மண்ணின் தன்மை மற்றும் நிலத்தின் அளவை பொறுத்து ஒரு பண்ணைக்குட்டை அமைக்க அதிகபட்ச மதிப்பீட்டுத் தொகையாக

ரூ.1.50 லட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டத்துக்கு 5 ஆயிரம் பண்ணைக்குட்டைகள் அமைக்க திட்டத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப் பண்ணைக் குட்டைகள் அமைப்பது தொடர்பாக ஆவணங்களைப் பெறுதல் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்தார். இக் கூட்டத்தில் உதவி செயற்பொறியாளர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வேளாண்மைத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தமிழகத்தில் வறட்சிப் பகுதிகளை பார்வையிட்டுச் சென்ற பின்னும், இதுவரையில் நிவாரணம் அறிவிக்காத மத்திய அரசை வன்மையாக கண்டிப்பதாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலர் பி. சண்முகம்

தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்ட அரசு ஊழியர் சங்க அலுவலக கட்டடத்தில் விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக வந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலர் பி. சண்முகம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
காவிரியிலிருந்து தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் எதுவும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் மழை பெய்து வருவதால் உபரி வடிநில நீர் வந்து கொண்டுள்ளது. கர்நாடாகத்தில் காங்கிரஸ் ஆட்சி நடந்து வருகிற நிலையிலும் இது குறித்து மத்திய அரசு கண்டு கொள்ளாமலே இருக்கிறது.

அதேபோல், தமிழகத்தில் வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு நிவாரண உதவித் தொகை பாதி பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பல விவசாயிகளுக்கு பட்டாதாரர் பெயரில் தொகை வந்துள்ளதாலும், குத்தகைதாரர்கள் போதிய ஆவணங்கள் இல்லாமல் இருப்பதாலும் நிவாரணத் தொகை பெற முடியாத நிலையிருக்கிறது.

அதனால், அத்தொகையை வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் பரிந்துரை செய்து சான்றிதழ் வழங்கியதின் அடிப்படையில் விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய நிவாரணக் குழுவினர் பார்வையிட்டு சென்றனர். ஆனால், இதுவரையில் வறட்சி நிவாரணத் தொகையை வழங்காததை வன்மையாக கண்டிக்கிறோம் என விவசாயிகள் சங்க பொதுச் செயலர் தெரிவித்தார்.

அப்போது உடன் மாவட்டச் செயலர் விஜயமுருகன் உள்ளிட்ட விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

**வேளாண் பல்கலை. கலந்தாய்வு நிறைவு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை படிப்புகளுக்கான முதல்கட்ட மாணவர் சேர்க்கை கலந்தாய்வு செவ்வாய்க்கிழமையுடன் (ஜூலை 9) நிறைவடைந்தது.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளநிலைப் படிப்புகளில் சேர்வதற்கான முதல்கட்ட மாணவர் சேர்க்கை கலந்தாய்வு ஜூலை 1-ஆம் தேதி தொடங்கியது.

இதனிடையே, கடந்த 9 நாள்களாக நடந்துவந்த கலந்தாய்வில் 1,291 இடங்கள் நிரம்பின. செவ்வாய்க்கிழமை நடந்த கலந்தாய்வில் 187 பேர் பங்கேற்றனர். இதில், 118 பேர் பல்வேறு பாடப் பிரிவுகளைத் தேர்ந்தெடுத்தனர்; 63 பேர் காத்திருப்போர்

பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர்; 6 பேர் எந்தப் படிப்புகளிலும் சேர விருப்பம் இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, கலந்தாய்வில் அனுமதிக் கடிதம் பெற்றவர்கள் ஜூலை 12-ஆம் தேதியன்று கல்விக் கட்டணம் செலுத்தி தங்களது இடத்தை ஊர்ஜிதம் செய்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.அன்றைய தினம் வராத மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு பூர்த்தியாகாத இடங்களுக்கு இரண்டாம் கட்டக் கலந்தாய்வு நடத்தப்படும் என்று பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**நுண்நீர் பாசன விழிப்புணர்வுக் கருத்தரங்கம்**

தோட்டக்கலைத் துறை மூலமாக நுண்நீர் பாசனம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் திருப்பூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தேசிய நுண்நீர் பாசன இயக்கத் திட்டத்தின்கீழ் திருப்பூர் மாவட்டத்தில் தோட்டக்கலை துறைக்கு 1,330 ஹெக்டேர், வேளாண்மைத் துறைக்கு 550 ஹெக்டேர் பரப்பளவில் நுண்நீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்த இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நுண்நீர் பாசனம், மானிய உதவி, அதன் பயன் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருப்பூர் ரமணாஸ் ஹோட்டல் அரங்கில் நுண்நீர் பாசன விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இதற்கு தலைமை வகித்து, கருத்தரங்கை ஆட்சியர் கு.கோவிந்தராஜ் துவக்கி வைத்தார். வேளாண் விஞ்ஞானிகள், தோட்டக்கலைத் துறை, வேளாண்மை துறை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் நுண்நீர் பாசன முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர். இதில், விவசாயிகள் நுண்நீர் பாசன மானியம் பெற விண்ணப்பங்கள் அளித்தனர்.

திருப்பூர் தோட்டக்கலை துணை இயக்குநர் (பொறுப்பு) மு.தமிழ்ச்செல்வன், வேளாண்மை இணை இயக்குநர் எம்.முகமது ஹலிமுல்லாஷெரீப், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் சென்னியப்பன், தமிழ்நாடு வேளாண்மைப்

பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முத்துவேல், தோட்டக்கலை அலுவலர் பெ.சித்தார்த்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் தளம்: விவசாயிகள் எதிர்ப்பு**

கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கும் அரசின் முயற்சிக்கு பல்வேறு பாசன சபை சங்கங்கங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

திருப்பூர் மாவட்டம், முத்தூரில் கீழ்பவானி பாசன பாதுகாப்பு விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது. இதில் இந்திய விசாயிகள் சங்க செயலாளர்  செ.நல்லசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் வெங்கடாச்சலம், ஓசை அமைப்பு செல்லையா, சுற்றுச் சூழல் ஆர்வலர் கதிர் உள்ளிட்ட பலர் பேசினர்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீலகிரிப் பகுதியில் பொழியும் மழை நீர் பவானி ஆற்றில் வடிந்து,அணையில் தேங்கி கீழ் பவானி பாசனத்துக்கு வளம் சேர்த்து வருகிறது. ஆசியாவின் மிகப்பெரிய மண் அணையான கீழ்பவானி அணையும், அதன் கால்வாய்களும் மண்ணால் ஆனது. இந்தக் கால்வாய் நீர் நிலத்தடி நீராக கசிந்து, நிலத்துக்கு வளம் சேர்கிறது. இந் நிலையில், வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கும் பொதுப் பணித் துறை திட்டமிட்டுள்ளது. இதனால் 2 லட்சம் ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்படும். நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கிணறுகள்,ஆழ்குழாய் கிணறுகள்,சிறு ஓடைகள் பாதிப்படைந்து குடிநீர் பற்றாக்குறை ஏற்படும். எனவே, அரசு இத்திட்டதைக் கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

**கார்ப்பரேட் நிறுவனங்களின் பிடியில் இருந்து விவசாயத்தை  மீட்பதற்கு விவசாயிகள் போராட முன்வர வேண்டும் என சமூக ஆர்வலர் பி.சாய்நாத் பேசினார்.**

கார்ப்பரேட் நிறுவனங்களின் பிடியில் இருந்து விவசாயத்தை மீட்பதற்கு விவசாயிகள் போராட முன்வர வேண்டும் என சமூக ஆர்வலர் பி.சாய்நாத் பேசினார்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-வது அகில இந்திய மாநாடு

கடலூரில் வரும் 24 முதல் 27-ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதையொட்டி திருப்பூர் டவுன்ஹால் அரங்கில் சிறப்புக் கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதற்கு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் பி.மோகன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.மதுசூதனன் வரவேற்றார். இதில், சமூக ஆர்வலர் பி.சாய்நாத் பேசியது:

விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்ட நிலம், தண்ணீர் உள்ளிட்ட இயற்கை வளங்கள் இன்றைக்கு மிகப்பெரும் நிறுவனங்களுக்கும், இதர தொழிலுக்கும் மாற்றிவிடப்படுகின்றன. இதனால் விவசாயத்தை சார்ந்து வாழக் கூடியவர்கள் குறைந்துக் கொண்டே வருகின்றனர்.

விவசாயத்தை சிறு விவசாயிகள் கையில் இருந்து பறித்து கார்ப்பரேட் நிறுவனங்களிடம் அரசு ஒப்படைக்கிறது. சிறு விவசாயிகளுக்கு கடன் கிடைப்பது குறைந்து, பெரிய நிறுவனங்களின் கைக்கு கடன் வழங்குவது அதிகரித்திருக்கிறது.

தனியார்மயம், தாராளமயக் கொள்கைகளை அமல்படுத்தும் அரசு லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை எடுத்து கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்குகிறது. கிராமங்களில் வசிப்போரும் விவசாயத்தை கைவிட்டு, வேறு தொழிலுக்கு மாறுகின்றனர். விவசாயம் மட்டுமின்றி கால்நடை, ஆடு, கோழி வளர்ப்பும் குறைந்துள்ளது.

விவசாயப் பிரச்னை பற்றி விவாதிக்க நாடாளுமன்றத்தில் சிறப்பு அமர்வை நடத்த வலியுறுத்த வேண்டும். குறைந்த வட்டியில் கடன், வறட்சிப் பகுதியில்

வட்டியில்லா கடன் வழங்க வேண்டும். மாவட்ட அளவில் விவசாயிகள் சங்கம் ஆராய்ச்சி நிலையம் அமைத்து விவசாயிகளுக்கு உதவ வேண்டும்.

தற்போது கார்ப்பரேட் நிறுவனங்கள் கையில் இருந்து விவசாயத்தை மீட்க வேண்டும். இதற்காக போராட விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார்.

**நாற்றங்கால் அமைக்க உழவுப் பணிகள் துவக்கம்**

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், நாற்றாங்கால் அமைக்க உழவுப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

ஜூன் 28-ஆம் தேதி தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இந்த இரு வாய்க்கால்கள் மூலமாக 24 ஆயிரத்து 504 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. கோபி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்டவற்றை பயிரிகிறார்கள்.

ஆனால், 9 மாதங்களாக பருவமழை பொய்த்ததாலும், பவானிசாகர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததாலும் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படாமல் இருந்து வந்தது. இதனால் விவசாயிகள் தங்களது நிலங்களை தரிசாக போட்டு வைத்திருந்தனர்.

இந்நிலையில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும், நஞ்சை புளியம்பட்டி பகுதியில் நெல் நாற்றங்கால் விடுவதற்காக வயல்களில் ஒரு பகுதியை தேர்வு செய்து, அப்பகுதியை டிரில்லர் இயந்திரம் மூலமாக உழவு போடும் பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

இப்பணிகள் முடிவடைந்ததும், டீலக்ஸ் பொன்னி என்ற சன்ன ரக நெல்லை விதைக்கப் போவதாக தெரிவித்தனர் என்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 62.97 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 62.97 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,132 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையின் நீர் இருப்பு 8.25 டி.எம்.சி.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

நாட்டறம்பள்ளியில் அனைத்து வீடுகள், கட்டடங்களிலும் ஜூலை 15-க்குள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்த வலியுறுத்தி, விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

இப்பேரணிக்கு பேரூராட்சி மன்றத் தலைவர் வெ.சரோஜா தலைமை வகித்தார். செயல் அலுவலர் ஜலேந்திரன், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் மகேஸ்வரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பாசனப் பகுதிகளை விரிவாக்கும் கர்நாடகம் : விவசாயிகள் சங்கம் கண்டனம்**

கர்நாடக அரசு பல்வேறு புதிய பாசனப் பகுதிகளை விரிவாக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளதற்கு காவிரி பாசன விவசாயிகள் நலப் பாதுகாப்புச் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் செயல் தலைவர் மகாதானபுரம் வி. ராஜாராம் விடுத்துள்ள அறிக்கை:

காவிரியில் தமிழகத்துக்கு உரிய உரிமையை வழங்காமல், உபரியாக தண்ணீர் வரும் போது மட்டும் தமிழகத்தை வடிகாலாகப் பயன்படுத்தி அந்த நீரை வெளியேற்றி விட்டு, அதைக் கணக்கில் காட்டும் போக்கை கர்நாடக அரசு

தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. இதனால், தமிழகத்தில் வேளாண் பணிகளுக்கும், குடிநீருக்கும் கூட தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகளும், மக்களும் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கர்நாடக முதல்வர் சித்தராமையா மைசூரில் பேசும் போது, மாநில பாசனத் திட்டங்களுக்கு ரூ. 50,000 கோடி ஒதுக்கப்பட்டு, அந்தத்  திட்டங்கள் 5 ஆண்டுகளில் படிப்படியாக  செலவழிக்கப்படுமென தெரிவித்துள்ளார். இது தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதி என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், கபினி அணை நிறைந்தால், அந்த தண்ணீர் மேட்டூருக்கு தான் வருகிறது. இந்த தண்ணீரையும் தமிழகத்துக்கு விடாமல் தடுக்கும் வகையில் சாம்ராஜ் நகர் மாவட்டம், கொல்லேகால் வட்டத்தில் வானம்பார்த்த பூமியான குண்டலிபெட், பெகூர், கவலாண்ட் ஆகிய இடங்களில் 180 கிராமங்களுக்கு 120 கிலோ மீட்டர் தூரம் வாய்க்கால் வெட்டி 1.86 லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி பெறும்.

இந்தத் திட்டத்தை செயல்படுத்த தண்ணீர் வசதி செய்து தர ஏக்கருக்கு ரூ. 500 என விவசாயிகள் தங்களுக்குள் வசூல் செய்து அரசிடம் ஒப்படைக்கவுள்ளனர்.

இத்திட்டங்கள் செய்து முடிக்கப்பட்டால், தமிழகத்துக்கு உபரி நீர் கூட கிடைக்காது. எனவே, தமிழகத்துக்கு உள்ள உரிமையின் அடிப்படையில் காவிரியில் தண்ணீரைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை தமிழக முதல்வர் மேற்கொள்ள வேண்டும். மேலும், தமிழகத்தில் உள்ள பாசனத் திட்டங்களை சீர்படுத்தி, பாசன வசதிகளை மேம்படுத்த வேண்டும். இதற்கான திட்டங்களை தமிழக முதல்வர் விரைந்து மேற்கொள்ள வேண்டும். இதற்கு விவசாயிகள் தங்களது பங்களிப்பைத் தரவும் தயாராக உள்ளனர். சூரியசக்தி விவசாய பம்புசெட்டுகள் பெருமளவில் விவசாயிகளுக்கு கிடைக்கவும், வேளாண் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தமிழக முதல்வர் முன்னுரிமை அளிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**தண்ணீர் பற்றாக்குறையால் வெற்றிலை விளைச்சல் வீழ்ச்சி**

கரூர் மாவட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறையால் நிகழ் பருவத்தில் வெற்றிலை விளைச்சல் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், லாலாபேட்டை, குளித்தலை உள்ளிட்ட காவிரி கரையோர பகுதிகளில் வெற்றிலை பயிரிடப்படுவது வழக்கம். வெள்ளைகொடி, கற்பூரம் என 2 ரகங்களில் பயிரிடப்படும் வெற்றிலைக்கு, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, பெரம்பலூர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் நல்ல வரவேற்பு உள்ளது.

வெற்றிலைக்கு நாள்தோறும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஆனால், பருவ மழை பொய்த்தது. காவிரி வறண்டது உள்ளிட்ட காரணங்களால் வெற்றிலைக்கு தண்ணீர் இல்லாமல் வேலாயுதம்பாளையம், லாலாபேட்டை, குளித்தலை ஆகிய பகுதிகளில் வெற்றிலை கொடிக்கால்கள் காய்ந்துவிட்டன.

தண்ணீர் இல்லாததால், வெற்றிலையில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, பூச்சி தாக்குதல் அதிகமாகியுள்ளது. இதனால் வெற்றிலை விளைச்சல் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

இதுகுறித்து வெற்றிலை விவசாயிகள் சிலர் கூறியது:

கரூர் மாவட்டத்தைப் பொருத்த வரை சுமார் 600 ஏக்கரில் வெற்றிலை பயிரிடப்படும். குறிப்பாக, வேலாயுதம்பாளையத்தில் 150 ஏக்கரில் வெற்றிலை பயிரிடப்படும். இங்கு வெற்றிலை வியாபாரத்துக்கான சந்தையும் உள்ளது. ஆனால், நிகழ் பருவத்தில் சுமார் 70 ஏக்கரில் மட்டுமே வெற்றிலை பயிரிடப்பட்டுள்ளது.

மேலும், கர்நாடக மாநிலத்திலிருந்து இப்போது, வெற்றிலை வரத்து அதிகமாகியுள்ளது. அதனால், இங்கு விளையும் வெற்றிலைக்கு உரிய விலையும் கிடைப்பதில்லை. சில ஆண்டுகள் முன்பு வரை 104 கவுளி கொண்ட வெற்றிலை ரூ. 5 ஆயிரத்துக்கு விற்பனையானது. இப்போது, வெறும் 3 ஆயிரம் மட்டுமே

கிடைக்கிறது. கற்பூரம் ரக வெற்றிலைக்கு ரூ. 3 ஆயிரம் வரை விலை கிடைத்தது. இப்போது, ரூ. 1,800 மட்டுமே கிடைக்கிறது.

தண்ணீர் பற்றாக்குறை, பூச்சி தாக்குதல் உள்ளிட்ட காரணங்களால் வெற்றிலை விளைச்சல் குறைந்துள்ளது. வெற்றிலைக்கான தேவையும் குறைந்து வருகிறது. சுப காரியங்கள் நடைபெறும் வீடுகளில் மட்டுமே வெற்றிலை அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது என்றனர்.

**"நலத் திட்டங்களைப் பெற  தென்னை விவசாயிகளுக்கு வாய்ப்பு'**

அறந்தாங்கி தென்னை விவசாயிகள் நலச் சங்கத்திற்கு தென்னை வளர்ச்சி வாரியத்தின் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டதன் மூலம், மத்திய அரசின் நலத் திட்டங்களை சங்க உறுப்பினர்கள் நேரடியாகப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றார் தென்னை வாரிய துணை இயக்குநர் ஹேமச்சந்திரன்.

மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியத்தின் அங்கீகாரத்துக்கான பதிவுச் சான்றிதழை அறந்தாங்கி தென்னை விவசாயிகள் நலச் சங்கத் தலைவர் பி. செல்லதுரையிடம் வழங்கிய அவர் மேலும் பேசியது:

இப்பதிவின் மூலம் வட மாநிலங்களுக்கு நேரடியாக தேங்காய் கொப்பரைகளை விற்பதற்கும், மரமேறும் கருவியைப் பயன்படுத்துதற்கும் பயிற்சியளிக்கப்படும். மேலும் ஏராளமான சலுகைகளும் கிடைக்கும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் தென்னை வாரிய கள ஆய்வாளர் ஆர். பரமசிவம், அறந்தாங்கி தென்னை உற்பத்தியாளர் சங்கச் செயலர் டி.ஏ.என். பீர்சேக், பொருளாளர்  ஆதி. ரவீந்திரகுமார், துணைத் தலைவர் ராசி எல். மூர்த்தி, இணைச் செயலர் வி. பாரதி, ஆலங்குடி காமராஜ், மணமேல்குடி செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**"நாட்டுக்கோழி வளர்த்தால் நல்ல லாபம்**

நாட்டுக்கோழி வளர்ப்பின் மூலம் அதிக லாபம் ஈட்டலாம் என்றார் வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் சு. மதியழகன்.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சியைத் தொடக்கி வைத்து அவர் மேலும் பேசியது:

நிலமற்ற சிறு விவசாயிகளுக்கு நாட்டுக்கோழிகள் நடமாடும் வங்கியாகும். கோழி வளர்ப்பால் குடும்ப வருமானம் உயர்வதோடு, குடும்பத்தின் புரதத் தேவையும் பூர்த்தியாகிறது.

நாட்டுக்கோழிகள் புதுக்கோட்டை மாவட்ட தட்பவெப்ப நிலையைத் தாங்கி நன்கு வளரக் கூடியவை. அதிக சுவை உடையவை. தற்போது நாட்டுக்கோழியின் வரத்து குறைவாக இருப்பதால் நகரில் மட்டுமல்லாமல் கிராமங்களிலும் மக்களின் தேவைக்கேற்ற கோழி கிடைப்பதில்லை.

மாவட்டத்தில் அனைத்துக் கிராமங்களிலும் வேளாண்மையுடன் உப தொழிலாக கறவைமாடு, ஆடு, மாடுகளை வளர்க்கின்றனர். அதோடு நாட்டுக்கோழி வளர்ப்பிலும் ஈடுபடலாம். நாட்டுக்கோழிகளில் புதிய ரகமான நந்தனம் - 2 நல்ல வருமானத்தைக் கொடுக்கிறது. மேலும் இந்தப் பயிற்சியின் பிரதிபலிப்பாக ஆர்வமுள்ள விவசாயிகள் நாட்டுக்கோழி பண்ணைகளைத் தொடங்கி முன்னேற வேண்டும் என்றார்.

இப்பயிற்சியின் ஒருங்கிணைப்பாளர் நூர்ஜஹான், கால்நடை மருத்துவர் ஆர். பாவை, கால்நடை பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மைய கால்நடை மருத்துவர் அ. கிளமெண்ட் எபனேசர் ஹென்றி ஆகியோர் பேசினர்.

இந்தப் பயிற்சியில் அறந்தாங்கி, திருமயம், இலுப்பூர், விராலிமலை, கீரனூர், ஆவுடையார்கோவில்,தஞ்சாவூர், பட்டுக்கோட்டை பகுதிகளிலிருந்து 184 விவசாயிகள் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 60.02 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 60.02 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 32,406 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 3,010 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**விவசாயிகளுக்கு ரூ.92 கோடி நிலுவை: 2 தனியார் சர்க்கரை ஆலைகளில் வசூல் நடவடிக்கை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய ரூ.92 கோடியை நிலுவை வைத்துள்ள 2 தனியார் சர்க்கரை ஆலைகளில் மாவட்ட நிர்வாகம் செவ்வாய்க்கிழமை வசூல் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

பாபநாசம் திருமண்டங்குடியில் உள்ள திரு ஆரூரான் சர்க்கரை ஆலையும், கும்பகோணம் கோட்டூரில் உள்ள அம்பிகா சர்க்கரை ஆலையும் விவசாயிகளிடமிருந்து பெற்ற கரும்புக்கு ரூ.92 கோடி வரை பட்டுவாடா செய்யாமல் நிலுவை வைத்துள்ளன. இந்த நிலுவைத் தொகையை உரிய வட்டியுடன் சேர்த்து வழங்குமாறு விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே, திரு ஆரூரான் சர்க்கரை ஆலை நிலுவை வைத்துள்ள ரூ.42 கோடியில் ரூ.20 கோடியை ஜூன் 30-க்குள்ளும், மீதித் தொகையை ஜூலை மாதத்துக்குள்ளும் பட்டுவாடா செய்துவிடுவதாக ஆலை நிர்வாகம் கடந்த மாதம் உறுதியளித்தது. இதேபோல, அம்பிகா சர்க்கரை ஆலை நிலுவை வைத்துள்ள ரூ.50.06 கோடியில் ஜூன் 30-க்குள் ரூ.23 கோடியும், ஜூலை மாதத்துக்குள் ரூ.15 கோடியும், மீதத் தொகை ஆகஸ்ட் மாத இறுதிக்குள்ளும் வழங்குவதாக ஆலை நிர்வாகம் ஒப்புதல் அளித்தது.

இந்த 2 ஆலைகளும் உறுதியளித்தபடி ஜூன் மாதத்துக்குள் விவசாயிகளுக்குச் செலுத்த வேண்டிய முதல் கட்ட நிலுவைத் தொகையைச் செலுத்தவில்லையாம்.

இதையடுத்து, நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக இரு ஆலைகளிலும் வருவாய் வசூல் சட்டப்படி வசூலிக்கும் நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

இந்த ஆலைகளுக்குச் சொந்தமான அசையும் சொத்துகள், அசையா சொத்துகள் என்னென்ன உள்ளன. அதில் எவ்வளவு நஞ்சை, புஞ்சை நிலங்கள உள்ளன என்பது குறித்த விவரம், மரங்களின் எண்ணிக்கை, கட்டடங்களின் பரப்பளவு, சர்வே எண்கள் உள்ளிட்ட விவரங்களை வருவாய்த் துறையினர் கணக்கெடுத்தனர். இந்த நடவடிக்கை தமிழக அரசின் உத்தரவுப்படி மேற்கொள்ளப்படுகிறது என வருவாய் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

**முன்பட்ட சம்பா சாகுபடிக்கு ஏற்ற வாய்ப்பு**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் டெல்டா மாவட்டங்களில் முன்பட்ட சம்பா சாகுபடிக்கு ஏற்ற வாய்ப்பு உருவாகியுள்ளது.

கடந்த ஆண்டு பருவ மழை மற்றும் காவிரி நீர் வரத்துக் குறைவால், சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டது. நிகழாண்டும் மேட்டூர் அணையில் நீர்மட்டம் மிகவும் குறைந்து, வறண்டுவிடக் கூடிய நிலையில் இருந்ததால், ஜூன் 12-ம் தேதி அணை திறக்கப்படவில்லை.

இதனால், குறுவை சாகுபடிக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. மோட்டார் பம்ப்செட் வசதியுள்ள விவசாயிகள் மட்டும் குறுவை சாகுபடி மேற்கொள்கின்றனர்.

இதனால், நிகழாண்டு சம்பா சாகுபடியும் கேள்விக்குறியாகவே இருந்து வந்தது. இந்நிலையில், கடந்த 10 நாள்களுக்கு மேலாக காவிரி நீர் பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது 60 அடியாக உயர்ந்துள்ளது.

இதன் மூலம், டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கான நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இதனால் முன்பட்ட சம்பா சாகுபடி பணிகள் தொடங்குவதற்கான வாய்ப்பும் அதிகரித்துள்ளது. மேட்டூர் அணையை ஆக.15-ல் திறந்தால் முன்பட்ட சாகுபடிக்கு சாதகமாக அமையும் என தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவையினர் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து அப்பேரவையைச் சேர்ந்த வ. பழனியப்பன் தெரிவித்தது: காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளது. எனவே, ஆக.15-ல் அணையைக் திறக்கலாம். இதன் மூலம், சம்பா சாகுபடியை முன்னதாகவே தொடங்குவதற்கும், நாற்று தயாரிப்பதற்கும் வாய்ப்பாக அமையும்.

குறிப்பாக, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதி விவசாயிகள் ஆகஸ்ட் மாத பிற்பகுதியில் 150 நாள் வயதுடைய ரகங்களின் விதை நெல்லை பயன்படுத்தி நேரடி விதைப்பு செய்தால் நல்ல மகசூல் பெற வாய்ப்புள்ளது. இதேபோன்ற முயற்சியை 1987-ல் மேற்கொண்டு வெற்றி பெற்றுள்ளோம்.

எனவே, குறைந்தது 50 % பரப்பில் நேரடி விதைப்பு செய்தால்கூட பலன் கிடைக்கும் என்றார் பழனியப்பன். ஆகஸ்ட் பிற்பகுதி அல்லது செப்டம்பரில் நடவு செய்தாலும் கூட அக்டோபரில் வடகிழக்குப் பருவமழை தொடங்கிவிடும். அந்த மழை நீர் பயிர்களுக்குப் போதுமானதாக இருக்கும். மேலும், பயிர்கள் ஓரளவுக்கு வளர்ந்துவிடும் என்பதால் வெள்ளப் பாதிப்பிலிருந்தும் காக்கலாம். சாகுபடிக்கு இறுதி வரை தண்ணீர் கிடைக்கவும் வாய்ப்பு இருக்கிறது. கடந்த ஆண்டு மழை பெய்து கொண்டிருந்த நிலையிலும் கூட சம்பா சாகுபடிக்கான ஆயத்தப் பணிகள் காலம் தாழ்ந்து தொடங்கப்பட்டது. இதனால், விவசாயிகள் வடகிழக்குப் பருவ மழையின்போதும், பின்னாளில் தண்ணீர் பற்றாக்குறையாலும் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகினர். எனவே, முன்பட்ட சம்பா சாகுபடிக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால், அதற்கான ஆயத்தப் பணிகளை முன்னதாகத் தொடங்கவும்,

அதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தமிழக அரசு முன்வர வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு

**விவசாயிகள் கருத்தரங்கு**

அகில இந்திய விவசாயிகள் சங்க 33-வது தேசிய மாநாட்டையொட்டி, சிறப்புக் கருத்தரங்கு கோவில்பட்டியில் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் கே.பி.பெருமாள் தலைமை வகித்தார். பத்திரிகையாளர் பி.சாய்நாத், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச்செயலர் பெ.சண்முகம் ஆகியோர் பேசினர். முன்னதாக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ராகவன் வரவேற்றார். ஒன்றியச் செயலர் கு.ராமசுப்பு நன்றி கூறினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**10.07.2013**

விவசாய மலர்

## ஒளிக்கற்றை கருவி கொண்டு நிலத்தை சமப்படுத்துதல்



நம் நாட்டின் சிறு மற்றும் குறு விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்கின்ற நிலப்பரப்பை சிறு சிறு பகுதிகளாக பிரித்து வரப்புகளை அமைத்து சாகுபடி செய்வதற்கு நிலச்சரிவு தாழ்வாக இருப்பது மிகப்பெரும் காரணியாக விளங்குகிறது. இதற்கு பெரும்பான்மையான நிலப்பகுதிகளை சரிவுகளுக்கு குறுக்கே வரப்புகளை அமைப்பதற்கு பயன்படுத்துவதால் சாகுபடி செய்யும் பரப்பளவுகுறைவாகவே இருக்கின்றது. மேலும் இச்சிறிய வயல் வரப்புகளை சாதாரண முறையில் நிலத்தை சமப்படுத்தி விவசாயிகள் சாகுபடி செய்துவருகின்றனர். இச்சாகுபடி முறையில் அதிகமான நீர் விரையம், அதிகமான உரம் மற்றும் சத்துக்கள் வீணாவ தோடு மட்டுமின்றி களைக்கொல்லிகளின் கட்டுப்பாட்டுத்திறன், உரம் மற்றும் நீரின் பயன்பாட்டுத்திறனை வெகுவாக குறைகின்றது. இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகாண டிராக்டரால் இயங்கும் ஒளிக்கற்றை கொண்டு நிலத்தைச் சமப்படுத்தும் கருவியை பயன்படுத்துவது

அவசியமானதாகும்.

ஒளிக்கற்றை கருவி கொண்டு நிலத்தை மிகத்துல்லியமாக சமன்செய்வதுடன் தேவைக்கு அதிகமான வரப்பு மற்றும் வாய்க்கால்களை நீக்கி சாகுபடி செய்யும் பரப்பளவை அதிகரிக்க செய்கின்றது. இதற்கு சாதாரண முறையில் விவசாயிகள் நிலத் தினை சமன் செய்வதற்கு ஆகும் செலவினைக் காட்டிலும் இரண்டு முதல் மூன்று மடங்கு அதிக செலவாகும். தோராயமாக ரூ.1500 முதல் 2000 வரை செல வாகும். இதனைக்கொண்டு நிலத்தை சமன்செய்தபிறகு விவசாயிகள் வயலில் அவ்வப்போது செய்யப்படும் சிறிய மாறுதல்கள் மற்றும் சீதோஷ்ண நிலைகள் நிலத்தின் சமப்பரப்பை சிறிதளவு பாதித்தாலும் இவற்றை எளிதாக சரிசெய்துவிட முடியும். எனவே ஒளிக்கற்றை கருவி கொண்டு நிலத்தை சமப்படுத்தி கீழ்க்கண்ட பயன்பாட்டை ஐந்து ஆண்டுகள் வரை பெறலாம்.

* பூஜ்ஜிய சரிவில் நிலத்தை மிகத்துல்லியமாக சமன் செய்வதால் குறைந்த நேரத்தில் வயலுக்கு நீரை கட்டி, நீரை வடித்திட முடியும்.
* ஒரே சீரான அளவில் வயலில் நீரை தேக்கிவைத்து 20-30 சதவீத நீரை மிச்சப்படுத்தி நீர் மற்றும் உரப்பயன்பாட்டுத்திறனை அதிகரித்து அதிக மகசூலை பெற வழிவகை செய்கிறது.
* குறைந்த எரிபொருளைக் கொண்டு (டீசல்) நீர் கட்டுவதால் நீரை இறைக்கும் செலவு குறைகிறது.
* ஒளிக்கற்றை கருவி கொண்டு நிலத்தை மிகத்துல்லியமாக குறைந்த நேரத்தில் (ஏக்கருக்கு 2-3 மணி) சமன்செய்வதால் மிகக் குறைந்த நீரைக்கொண்டு சாகுபடி செய்யலாம். மேலும் சேமிக்கப்படும் நீரைக்கொண்டு சாகுபடி செய்யும் பரப்பளவை 2 முதல் 5 சதவீதம் வரை அதிகரிக்க முடியும்.
* பயிர் வளர்ச்சியை மேம்படுத்தி சீரான பயிர் முதிர்ச்சிக்கு வழிவகை செய்கிறது.
* நீர் பாய்ச்சும் திறனை 50 சதவீதம் வரை அதிகரிக்கச் செய்கிறது.
* குறுகிய காலத்தில் அதிக பயிர்களை சாகுபடி செய்து பயிர் உற்பத்தியை பெருக்க வழிவகை செய்கிறது.
* களைகளின் தாக்கத்தை வெகுவாக குறைத்து களைக்கொல்லியின் கட்டுப்படுத்தும் திறனை மேம்படுத்துகிறது.

* களர் மற்றும் உவர் மண்ணின் தன்மையை சீரமைக்க வழிவகை செய்கிறது.

**குறைபாடுகள்:**

* ஒளிக்கற்றை கொண்டு நிலத்தை சமன்படுத்தும் கருவியின் விலை மிக அதிகம் (ரூ.5 முதல் 7 லட்சங்கள் வரை)

* ஒளிக்கற்றையை சரிசெய்வதற்கும் டிராக்டரில் இணைத்து இயக்குவதற்கும் கைதேர்ந்த நபர்களையே சார்ந்து இருக்க வேண்டியுள்ளது.

* ஒளிக்கற்றை கொண்டு நிலத்தை சமப்படுத்தும் கருவி யின் சமப்படுத்தும் திறன் மிக குறுகிய வயல்களுக்கும் ஒழுங்கற்ற முறையில் அமைந்துள்ள வயல்வெளிகளுக்கும் மிக குறைவாகவே இருக்கும்.

**பெ.கதிர்வேலன் மற்றும் சி.சுவாமிநாதன்,**

**மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு.**

## சின்னச்சின்ன செய்திகள்





**குரும்பை கொட்டுதல்:** தென்னையில் பாரம்பரிய குணம், மண்ணில் அதிக உவர், களர், முறையற்ற நீர் மேலாண்மை, மண்ணின் சத்து பற்றாக்குறை, பூச்சி நோய் தாக்குதல் ஆகிய காரணங்களால் ஏற்படுகிறது.

தென்னை வேர்களுக்கு கிடைக்க வேண்டிய நுண்ணூட்டம், வேரூட்டம், வேர்களுக்கு எளிதாக கிடைக்கும் வகையில் நீர் மேலாண்மை வடிகால் வசதியை சீராக இருக்கச் செய்வதாலும் குரும்பை உதிர்வதைக் கட்டுப்படுத்தலாம்.

மண் பரிசோதனை செய்ய வசதி இல்லாத இடங்களில் பசுந்தாள் உரங்களான யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 2

கிலோ, 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து ஒவ்வொரு மரத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் இடவேண்டும்.

நாப்தலின் அசிடிக் அமிலத்தை (பிளானோபிக்ஸ்) பாளைகள் வெடித்து ஒரு மாதம் கழித்து அரை மிலி அளவை ஒரு லிட்டர் சுத்தமான நீரில் கலந்து பாளைகளில் தெளிப்பதன் மூலம் இக்குறைபாட்டினைத் தவிர்க்கலாம்.

முறைப்படி உரங்களை இடுவதுடன் 2 கிலோ அதிக பொட்டாஷ் உரமும் 200 கிராம் வெண்காரமும் (போரான்) தொடர்ந்து

3 வருடங்களுக்கு இடுவதால் ஒல்லிக்காய்களை கணிசமாகக் குறைக்கலாம்.

மஞ்சள் நிறம் ஓலைகளின் நுனியில் துவங்கி நாளடைவில் இலை முழுவதும் பச்சை நிறம் இல்லாது காணப்படும் நிலையில் பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இடுவதுடன் கூடுதலாக மரத்திற்கு 500 கிராம் மக்னீசியம் சல்பேட் இடுதல் வேண்டும்.

தென்னையில் முறையான நீர்மேலாண்மை பூச்சி, நோய் கட்டுப்பாடுகளைச் செய்து அதிக விளைச்சல் பெறலாம்.

**குதிரைவாலி:** தற்போதைய வறட்சி சூழலில் சிறுதானியப்பயிர் குதிரைவாலியை அனைத்து வகையான மண்ணிலும் சாகுபடி செய்யலாம். வயது 90-100 நாட்கள். ஆடி 18ம் நாளுக்குப் பிறகு விதைத்தால், ஆவணி, புரட்டாசி, ஐப்பசி ஆகிய மூன்று மாதங்களில் அவ்வப்போது கிடைக்கும் மழையில் பயிர் வளர்ந்துவிடும். நிலத்தை 5 முறையாவது உழவுசெய்து கொண்டால் களைகள் வளராது. ஒரு ஏக்கர் விதைக்க 5 கிலோ விதை தேவைப்படும். விதையை வயலில் தூவி விதைக்க வேண்டும். சால் பயிராக துவரை, மொச்சை, தட்டைப்பயறு, கல்லுப்பயறு ஆகியவற்றை விதைக்கலாம்.

பூச்சி, நோய் தாக்குதல் இருக்காது. விதைத்த பிறகு ஏக்கருக்கு 45ம் நாள் 100 கிலோ மண்புழு உரம் தூவிவிட வேண்டும். அறுவடையின் போது தட்டையை நிலத்திலேயே விட்டுவிட்டு கதிரை மட்டும் அறுத்து எடுத்து வெயிலில் காயவைத்து டிராக்டர் மூலம் நசுக்கி எடுத்து தூற்றிக் கொள்ளலாம்.

ஏக்கருக்கு சராசரியாக 8 குவிண்டால் தானிய மகசூல் கிடைக்கும். தொடர்புக்கு: அனுபவ விவசாயி மதுரை எழுமலையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற நீதிபதி சடையாண்டி, 94434 60833.

**வறட்சியைத் தாங்கும் தென்னை:** தேசிய தென்னைக்கான ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் வறட்சியைத் தாங்கி வளரும் தென்னை ரகத்தைக் கண்டறியும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு தற்போது அதில் வெற்றி கண்டுள்ளார்கள். கர்நாடக மாநிலம் தும்கூர் மற்றும் தமிழகத்தில் சிவகங்கைமாவட்டம், குன்றக்குடி ஆதீனத்திற்கு உட்பட்ட தென்னந்தோப்பு ஆகிய இடங்களிலிருந்து தென்னை மரங்களில் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய ரகத்தை கண்டறிந்துள்ளனர். ஆராய்ச்சியாளர்கள் இந்த இரண்டு மரங்களின் மகரந்தங்களை இணைத்து, வறட்சியைத் தாங்கி வளரும் புதிய ரகத்தை உருவாக்கியுள்ளனர்.
தேசிய தென்னை ஆராய்ச்சி நிலையம் மற்றும் குன்றக்குடி வேளாண் அறிவியல் மையம் இணைந்து வெளியிட்டுள்ள அந்த புதிய ரக தென்னங்கன்றுகள், குன்றக்குடி ஆதீன மடத்தில் தற்போது விற்பனையில் உள்ளன.
நடவு செய்த 7ம் ஆண்டிலிருந்து பலனைக் கொடுக்கக்கூடிய இந்த நெட்டை ரக தென்னை 100 ஆண்டுகளுக்கு மேலாக பலன் கொடுக்கக்கூடியது. 100 ரூபாய்க்கு மேல் விலையுள்ள இந்த ரகக் கன்றுகள் விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் உற்பத்திச் செலவான ரூ.30க்கே விற்பனை செய்யப்படுகிறது என்கிறார், ஆதீனத்தைச் சேர்ந்த ராஜா. தொடர்புக்கு: ராஜா, 94425 31581, 99522 77350.

**ரெட்லேடி பப்பாளி:** புதிய பயிர்களை விவசாயம் செய்வதில் ஆர்வம் காட்டி வரும் விவசாயி பாலதண்டாயுதபாணி, கோயம் புத்தூர் சின்னக்குயிலி கிராமத்தைச் சேர்ந்தவர். இப்போது 3 வருடமாக பழத்துக்காக பப்பாளி சாகுபடி செய்கிறார். ஒரு ஏக்கர் ரெட் லேடி பப்பாளி சாகுபடி செய்ய செலவு ரூ.59,500. மகசூல் வருமானம் ரூ.4,20,000. நிகர லாபம் ரூ.3,60,500. நடவு செய்த 8ம் மாதம் அறுவடை. தொடர்ந்து 14 மாதங்கள் மகசூல் கொடுக்கும். தொடர்புக்கு: பாலதண்டாயுதபாணி,

98946 99975.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## வீட்டு மூலிகைத்தோட்டம்



உலக அளவில் 3.6 லட்சம் மருத்துவ குணம் கொண்ட மூலிகைப்பயிர்கள் உள்ளதாக அறியப்படுகிறது. இவற்றில் ஏறக்குறைய 1.4 லட்சம் மூலிகைகள் இந்திய துணைக்கண்டத்தில் காணப்படுகின்றன.

மக்களின் அடிப்படை மருத்துவத்தேவைக்கு மூலிகைச்செடிகள் உபயோகப்பட வேண்டிய அவசியமும் கட்டாயமும் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது உலகமே மூலிகை மருத்துவத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது. இதனை உணர்ந்தே வம்பன் தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையத்தில் உள்ள வேளாண் அறிவியல் பணிபுரியும் விஞ் ஞானிகள் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மூலிகைத்தோட்டம் உருவாக்கி நமக்குத் தேவையான மூலிகைகளை நாம் ஏன் உற்பத்தி செய்யக்கூடாது என்ற புதிய நோக்குடன் வீட்டிலே ஒரு மூலிகைத்தோட்டம் என்ற புதிய கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். வீட்டுக் காய்கறித்தோட்டம் மட்டுமல்ல, வீட்டு மூலிகைத் தோட்டமும் இன்றைய காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

**துளசிச்செடிகள்** : துளசியில் பல இனங்கள் உண்டு. அவற்றில் திருநீற்றுப் பச்சிலை, கஞ்சாங்கோரை, நாய்த்துளசி மற்றும் பெருந்துளசி ஆகியவை வீட்டுத்தோட்டத்தில் மற்றும் தொட்டிகளில் நன்கு வளரக்கூடியவை. துளசியிலிருந்து பிரித்தெடுக்கப்படும் சாறு குழந்தைகளுக்கு ஏற்படும்

வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல், கபம் முதலியவற்றைக் குணப்படுத்தும் தன்மையுடையது. மேலும் குடல் புழுக்கள், காதுவலி, தோல் சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்தும்.

**கீழாநெல்லி:** கீழாநெல்லியின் இலை மற்றும் தண்டு மஞ்சள் காமாலை நோயைக் குணப்படுத்துகிறது. இதன் பொடியை பாலுடன் கலந்து அருந்துவதன் மூலம் நோய் குணமடைகிறது. சிறுநீர் பெருக்கியாகவும், வெப்ப அகற்றியாகவும், வீக்கம், கட்டி ஆகியவற்றைக் கரைத்து நரம்பு, சதை ஆகியவற்றை சுருங்கச் செய்யும் மருந்தாகவும் செயல்படுகிறது. கீழாநெல்லி முற்றிய மஞ்சள் காமாலையையும் குணப்படுத்தும் திறன் உடையது. மாலைக்கண், பார்வை மங்கல், நீர்வடிதல், ஓயாத தலைவலி, சோகை, ரத்தமின்மை மற்றும் கல்லீரல் பழுது ஆகியவற்றையும் குணப்படுத்தும்.

**ஆடாதொடை:** இருமல் மருந்துகளில் பெரிதும் பயனாகும் ஒரு செடியாகும். மார்பில் இருக்கும் கபத்தை வெளிக்கொண்டு வருவதில் தென் அமெரிக்க காட்டுத் தாவரமான இபிகாகுவானாவுக்கு ஈடானது. ஆடுதொடா இலைச்செடி இலையையும், வேரையும் சமபங்கு எடுத்து சுத்தம் பார்த்து, இடித்து கஷாயமாக்கி அருந்தினால் மார்புச்சளி வெளியாகிவிடும். கபமிளக்கும் மருந்துகளை ஆக்கத்தேவையான vasicine போன்ற ஆல்கலாயிடுகள் ஆடுதொடா இலையின் வேரிலிருந்துமே பெறப்படுகின்றன.

**கரிசலாங்கண்ணி:** இது உடலிற்கு பொற்சாயலையும், விழிக்கு ஒளியையும் தெளிவையும் உண்டாக்கும். குன்ம கட்டியைப் போக்கும் பலவித செந்தூரங்கள் செய்யவும் உதவும். இதை உட்கொள்ள பாண்டு, சோபை, காமாலை முதலிய நோய்கள் தீரும். இதன் இலைச்சாற்றை நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி தலைக்குத் தேய்க்க முடி கருமையாக வளரும். வேர் சூரணம் கல்லீரல் மற்றும் மண்ணீரல் நோய்களுக்கும் சரும நோய்களுக்கும் கொடுக்க குணமாகும். சிறு குடலுக்கு வலிமை தரும். வீக்கங்களை குறைக்கும். இதை கீரையாக அடிக்கடி பருப்பு, நெய் சேர்த்து உணவுடன் உட்கொள்ள மலச்சிக்கல் நீங்கும். பொதுவாக இது வீட்டுத் தோட்டத்தில்

வளரக்கூடியதாகையால் வளர்த்து பயனடையலாம்.

**-கே.சத்தியபிரபா,உடுமலை.**

## தரமான விதை உற்பத்திவிவசாயிகளுக்கு அறிவுரை

திருநெல்வேலி:தரமான விதை உற்பத்திக்கு கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.இதுகுறித்து நெல்லை விதை சான்று உதவி இயக்குனர் அசோக்குமார் தெரிவித்ததாவது:தரமான விதை உற்பத்தியில் களைகளை உரிய நேரத்தில் தகுந்த முறையில் நீக்கினால் மட்டும விதை தரத்தை வயலில் பேணி காக்க முடியும். சான்று செய்யப்பட்ட விதைகளை அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனை மையங்களில் இருந்து மட்டுமே வாங்கி பயன்படுத்த வேண்டும். அதிக அளவில் விதைகளை வாங்கும் போது அனைத்து மூடைகளும் ஒரே ரகமாக உள்ளவா என கவனித்து வாங்க வேண்டும்.நடவு முடிந்து மீதமாகும் நாற்றுக்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். விதை உற்பத்தி பணியில் ஈடுபடும் அனைத்து தொழிலாளர்களுக்கும் ரகங்கள் மற்றும் கலப்புகள் பற்றி எடுத்து கூற வேண்டும். ரகங்களை தனித்தனியே அறுவடை செய்து கதிரடித்தல் மற்றும் காய வைக்க வேண்டும். நன்கு காய வைத்த விதைகளை புதிய கோணி பைகளில் மட்டுமே சேகரித்து வைக்க வேண்டும். பல ரகங்கள் உள்ள நிலையில் மூடைகளை ரக வாரியாக தனி அறையில் வைக்க வேண்டும். இதுபோன்ற வழிமுறைகளை பின்பற்றினால் விதை நெல் உற்பத்தியில் நல்ல விதைகளை உற்பத்தி செய்யலாம்.இவ்வாறு உதவி இயக்குனர் தெரிவித்தார்.

## பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து சரிவுகீழ்பவானி பாசன விவசாயிகள் கவலை

சத்தியமங்கலம்: நீலகிரி மலைப்பகுதியில் மழையில்லாததால், பவானிசாகர் அணைக்கு நேற்று மதியம் வினாடிக்கு, 72 கனஅடி தண்ணீர் மட்டுமே வந்தது. சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. இந்த அணைக்கு நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறு, கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாற்றின், நீர்வரத்தை ஆதாரமாக கொண்டுள்ளது. கடந்த மாதத்துக்கு முன், அணையின் மொத்தம் நீர்பிடிப்பு உயரமான, 105 அடியில், அணையின் நீர்மட்டம், 29 அடியாக சரிந்து காணப்பட்டது.குடிநீர் பஞ்சம் ஏற்படும் அபாயம்

ஏற்பட்டது. இந்நிலையில், நீலகிரி மலைப்பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. மேட்டுப்பாளையம் அருகே உள்ள பில்லூர் அணையிலும் தண்ணீர் நிரம்பியதால், உபரி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இதனால் பவானிசாகர் அணைக்கு வினாடிக்கு, 17,000 கனஅடி வரை தண்ணீர் வந்தது.அணையின் நீர்மட்டம் மளமளவென உயர்ந்து, 60 அடியை தொட்டது. பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனப்பகுதிக்கு தண்ணீர் திறக்க, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.கீழ்பவானி பாசன விவசாயிகளும், தங்கள் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என, கோரிக்கை வைத்துள்ளனர்.இந்நிலையில், நேற்று மதியம், 11 மணியளவில் பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து மிகவும் குறைந்து வினாடிக்கு, 72 கனஅடி மட்டுமே வந்தது. அணையில் இருந்து பவானி ஆற்றில் பாசனத்துக்காக வினாடிக்கு, 900 கனஅடி தண்ணீரும், கீழ்பவானி வாய்க்காலில் குடிநீருக்காக வினாடிக்கு, 5 கனஅடி தண்ணீரும் திறந்து விடப்பட்டது.நேற்று மதியம் அணையின் நீர்மட்டம், 62.95 அடியாக இருந்தது. அணையின் மொத்த நீர் கொள்ளளவு, 32 டி.எம்.சி., ஆகும். நேற்று, 8.2 டி.எம்.சி., தண்ணீர் இருந்தது. அணைக்கு வரும் தண்ணீரின் அளவு, 72 அடியாக குறைந்ததால், கீழ்பவானி வாய்க்கால் பாசன விவசாயிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## மானிய விலையிலான விதை நெல் தட்டுப்பாடு :உழவுப்பணியோடு விவசாயிகள் கவலை

கோபிசெட்டிபாளையம்: வேளாண்மை விரிவாக்க மையங்களில், மானிய விலை விதை நெல் கிடைக்காததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தின் மிகப்பெரிய அணையான பவானிசாகர் அணையில் திறக்கப்படும் தண்ணீர், கோபி அருகே கொடிவேரியில் தேக்கி வைக்கப்பட்டு, அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளுக்கு ஆண்டுதோறும் ஏப்ரல், 15ம் தேதி முதல்போக சாகுபடிக்காக திறக்கப்படுகிறது. பாசன பகுதியில், 24 ஆயிரம் ஏக்கர் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படுகிறது.பருவமழை ஏமாற்றத்தால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் ஏப்ரலில் திறக்கவில்லை. கோபி யூனியனில் தடப்பள்ளி

பாசனமும், டி.என்.பாளையம் யூனியனில் அரக்கன்கோட்டை பாசனமும் உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் பெய்த பலத்த மழையால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 60 அடியை தொட்டத்தை தொடர்ந்து, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் தண்ணீர் திறக்கப்பட்டது. நாற்று விடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக இறங்கி உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, கோபி, சத்தி, பவானி, அந்தியூர், நம்பியூர், டி.என்.பாளையம் உள்பட, 14 யூனியன்கள் உள்ள, வேளாண் விரிவாக்க மையங்களில் மானிய விலையில் விதை நெல் வினியோகம் செய்யப்படுகிறது. இதில், கோபி, டி.என்.பாளையம் யூனியனில் உள்ள தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் தற்போது தண்ணீர் திறக்கப்பட்டதால், நெல் நடவுக்கான ஆயத்த பணி துவங்கியது. இப்பாசன பகுதியில் குண்டு ரகம், சன்னரக நெல் அதிகளவில் பயிரிடப்படுகிறது.இங்கு டீலக்ஸ் பொன்னி பயிரிட்டால், மகசூல் குறைவாக கிடைக்கும் என வேளாண் துறை சார்பில் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், கூடுதல் விலை கிடைப்பதால், பல விவசாயிகள் டீலக்ஸ் பொன்னி பயிரிடுகின்றனர்.கோபி, டி.என்.பாளையம் யூனியன் வேளாண் விரிவாக்க மையம் மூலம், விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை நெல் வினியோகம் செய்யப்படுகிறது. குண்டு ரகம் ஒரு கிலோ, 16 ரூபாய்க்கும், சன்ன ரகம் ஒரு கிலோ, 22 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. கூட்டுறவு சொசைட்டி அல்லது வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ விதை, 37 முதல், 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்ட சில நாட்களிலேயே, வேளாண் விரிவாக்க மையத்தில் வைக்கப்பட்டு இருந்த விதை நெல் விற்று தீர்ந்து விட்டது.விதை நெல் கிடைக்காமல், விவசாயிகள் கூடுதல் விலை கொடுத்து, வெளியில் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் கூறியதாவது:தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனத்தில் நாற்று விடும் பணி தீவிரமாக நடக்கிறது. வேளாண் விரிவாக்க மையத்தில், மானிய விலையில் விதை நெல் வழங்கி, மானிய தொகைக்கு நுண்ணூட்ட உரம் வழங்குகின்றனர். விரிவாக்க மையத்தில்

விற்கப்படும் விதை நெல், விலை குறைவு என்பதால், சில நாட்களிலேயே விவசாயிகள் வாங்கி சென்றுவிட்டனர்.கோபி வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் மற்றும் தனியாரிடம் விதை நெல் வாங்கும்போது கூடுதல் செலவாகிறது. வேளாண் விரிவாக்க மையத்தில் ஒரு சில இடங்களில் மொத்தமாக விதை நெல் விற்றுவிட்டதால், விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு தேவையான விதை நெல் இருப்பு வைக்க வேளாண் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.வேளாண்மை துறை சார்பில் வழங்கப்படும் மானியம் குறித்த அறிவிப்பும் வெளியாகவில்லை. பாசனப்பகுதியில் கர்நாடகாவில் பயிரிடப்படும் டீலக்ஸ் பொன்னி பயிரிட்டால், 25 சதவீத மகசூல் பாதிக்கும் வாய்ப்புள்ளது, என்றனர்.

## வேளாண் கூட்டுறவு சங்கத்தில்ரூ.60 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 60 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது.சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் பகுதி விவசாயிகள், பருத்தியை அதிகமாக பயிரிட்டுள்ளனர். இப்பகுதியில், தற்போது பருத்தி வெடித்து அறுவடை நடந்து வருகிறது. அறுவடை செய்யப்பட்ட பருத்தியை, ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை ஏலம் முறையில் விற்பனை செய்ய, சத்தியமங்கலம், கோபி ரோட்டில் உள்ள தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்துக்கு விவசாயிகள் எடுத்து வருகின்றனர். கோவை அன்னூர், பல்லடம், திருப்பூர் மற்றும் ஈரோடு, கோபி ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்து, விவசாயிகளிடம் பருத்தி ஏலம் முறையில் வணிகம் செய்கின்றனர்.நேற்று மொத்தம், 3,500 மூட்டை பருத்தி விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. கடந்த வாரம் சராசரியாக, ஒரு கிலோ பருத்தி, 55 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று கிலோவுக்கு, 2 ரூபாய் அதிகரித்து, ஒரு கிலோ பருத்தி, 57 ரூபாய் வரை விற்பனையானது. மொத்தம், 60 லட்சம் ரூபாய்க்கும் மேலான பருத்தி விற்பனையானதாக, சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

கோபிசெட்டிபாளையம்: விவசாய விளை பொருட்களில் இருந்து மதிப்பு கூட்டுதல் பொருளாக தயாரித்தல் முறை குறித்து, கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது.உதவி இயக்குனர் அல்தாப் தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு நெல், மக்காச்சோளம், தேங்காய், கொப்பரை, மஞ்சள் பயிர்கள் அறுவடைக்குப்பின் இழப்புகள் ஏற்படாமல் சந்தைப்படுத்துதல் குறித்து பயிற்சியளித்தனர்.தேங்காயில் இருந்து மதிப்பு கூட்டு பொருளாக இளநீர், தேங்காய் சிப்ஸ், எண்ணெய், துருவல் பவுடர் தயாரித்தல் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங், வேளாண் அலுவலர் கார்த்திகேயன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## மழைநீர் சேகரிப்பு கருத்தரங்கம்

ஈரோடு: ஈரோட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் மழைநீர் சேகரிப்பு கருத்தரங்கம் நடந்தது.கிராம குடிநீர் திட்ட கோட்ட நிர்வாக பொறியாளர் சந்திரசேகரன் வரவேற்றார். ஈரோடு ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் (பஞ்சாயத்துக்கள்) ரூபன்சங்கர்ராஜ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் துணை நிலநீர் நிபுணர் சகாதேவன், ராஜு ஆகியோர் மழைநீர் சேகரிப்பு குறித்து பேசினர். கலெக்டர் சண்முகம் தலைமை வகித்து, மழை நீர் சேகரிப்பு குறித்தும், அதன் முக்கியத்துவம், பயன்பாடற்று உள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டியை சீரமைப்பது குறித்தும் விளக்கி பேசினார்.

## இரு மாதத்தில் 14.8 லட்சம் கிலோ பசுந்தேயிலை கொள்முதல்

மஞ்சூர் : எடக்காடு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் மே, ஜூன் இரண்டு மாதத்தில் அங்கத்தினர்களிடமிருந்து 14.8 லட்சம் கிலோ பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

எடக்காடு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை வளாகத்தில், பொது தேர்வில் சாதித்த அங்கத்தினர்களின் குழந்தைகளுக்கு பரிசளிப்பு, அங்கத்தினர்களுக்கு

பங்கு தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

தொழிற்சாலையின் பெருந்தலைவர் சகாதேவன் வரவேற்றார். முன்னதாக, 10ம் வகுப்பு, பிளஸ் 2 பொதுத் தேர்வில் அரசு, தனியார் பள்ளி அளவில் முதல் மூன்றிடங்களை பிடித்த அங்கத்தினர்களின் குழந்தைகளுக்கு, முதல் பரிசு 2000ரூபாய், இரண்டாம் பரிசு 1500, மூன்றாம் பரிசு 1000 ரூபாய் என ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

தொடர்ந்து, தொழிற்சாலை பெருந்தலைவர் சகாதேவன் கூறுகையில்,""தொழிற்சாலையில் மே, ஜூன் மாதத்தில் மட்டும் மாவட்டத்தில் உள்ள மற்ற கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை மிஞ்சும் அளவுக்கு, 14.8 லட்சம் கிலோ பசுந்தேயிலை அங்கத்தினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சுமார் 4.50 லட்சம் கிலோ தேயிலை தூள் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளதாக மேலும், தொழிற்சாலை லாபத்தில் 10 சதவீதம் பங்கு தொகையாக 1,461 அங்கத்தினர்களுக்கு 10 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது,'' என்றார்.

பெருந்தலைவர் சகாதேவன் அங்கத்தினர்களிடம் தெரிவித்தார். இதில், எம்.எல்.ஏ., புத்திசந்திரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இன்கோசர்வ் இணை இயக்குனர் சாமிநாதன், இன்கோசர்வ் சேர்மன் சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## மா சாகுபடியில் பட்டதாரி வாலிபர் தரிசாக இருந்த நிலம் வளமானது

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாம்பழ பயிர் செய்வதில்,விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாம்பழங்கள் ஏற்று மதி செய்யும் அளவுக்கு,மாந்தோப்புகளின் எண்ணிக்கை, கடந்த 10 ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. தற்போது, காஞ்சிபுரம் அடுத்த விச்சந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரிவெங்கடேசன் என்பவர், தனக்கு சொந்தமான, 2 ஏக்கர் நிலத்தில், 300 மாங்கன்றுகளை விளைவி த்து ள்ளார்.இதுகுறித்து, அவர் கூறியதாவது:விவசாயத்திற்கு, கூலியாட்கள் பற்றாக்குறை யால், என் விளை நிலங்களை, கடந்த, 5 ஆண்டுகளாக பயிரிடாமல் கரம்பாக போட்டிருந்தேன்.இந்நிலையில், காஞ்சிபுரம் அரசு தோட்டக்கலை துறையைச்

சேர்ந்த அதிகாரிகள், மாங்கன்றுகளை நடவு செய்யுமாறு ஊக்கப்படுத்தினர். இதற்காக,அப்போன், பங்கனபள்ளி, காலபாடி, மல்கோவாஆகிய வீரிய ஒட்டுரக மாங்கன்றுகளை,ஆத்தூர் அரசு தோட்டக்கலை பண்ணையில் இருந்து, மானியவிலைக்கு வழங்கினர்.இவைகள், மூன்றாவதுஆண்டில் காய்க்க துவங்கும். வராத்திற்கு இரண்டுமுறை கால்வாய்கள்மூலம் தண்ணீர் விட்டுபராமரித்து வருகிறேன்.

அதிகாரிகள் கூறிய ஆலோசனைப்படி பூச்சி,நோய்கள் தாக்காமல்தேவையான மருந்துகளை தெளிக்கிறேன்.மரங்கள் செழிப்பாகவளர்ந்து வருகின்றன.நல்ல மகசூல் கிடைக்கும்என, காத்திருக்கின்றேன்.தற்போது, அருகில் உள்ள விவசாயிகள் சிலரும்,மாம்பழ சாகுபடியில்ஈடுபட்டு வருகின்றனர்.இவ்வாறு, அவர் கூறினார்.

### மேட்டூர் அணைக்கு கைகொடுக்காத காவிரி

மேட்டூர்: நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்த நிலையில், மேட்டூர் அணைக்கு, காவிரி கைகொடுக்காத நிலையில், காவிரியின் துணையாறுகளின் ஒன்றான கபினி மூலமே, 15 நாளில் மேட்டூர் அணைக்கு, 20 டி.எம்.சி., நீர் கிடைத்துள்ளது.மேற்கு தொடர்ச்சிமலையில் உள்ள குடகு பகுதியில் உற்பத்தியாகும் காவிரியுடன், கர்நாடகாவில் ஹேமாவதி, ஹேரங்கி, லட்சுமண தீர்த்தம், கபினி, ஸ்வர்ணவதி, சிம்சா, ஆர்காவதி உள்பட, பத்துக்கும் மேற்பட்ட துணையாறுகள் கலக்கிறது.இதில், காவிரி குறுக்கே கே.ஆர்.எஸ்., அணையையும், ஹேமாவதி, ஹேரங்கி, கபினி ஆகிய துணையாறுகள் குறுக்கே தனித்தனி அணைகளையும் கர்நாடகா கட்டியுள்ளது. இதில், ஹேமாவதி, ஹேரங்கி அணை நிரம்பினால், உபரி நீர் காவிரி வழியாக கே.ஆர்.எஸ்., அணையை சென்றடையும்.ஆனால், கேரளா நீர்பிடிப்பு பகுதியை ஆதாரமாக கொண்ட கபினி நிரம்பினால், உபரி நீர், 241 கி.மீ., துாரமுள்ள மேட்டூர் அணைக்கு நேரடியாக வந்து சேரும். நடப்பாண்டு குடகு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து, காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போதிலும், அந்த தண்ணீர் முழுவதும் கே.ஆர்.எஸ்., அணைக்கே செல்கிறது.

கடந்த, 15 நாட்களாக வினாடிக்கு, 1,500 முதல், 2,000 கனஅடி நீர் மட்டுமே

கே.ஆர்.எஸ்., அணையில் இருந்து கரையோர பாசனத்துக்காக காவிரியில் வெளியேற்றப்படுகிறது. இதில், மிககுறைவான நீரே மேட்டூர் அணைக்கு வருகிறது.காவிரி துணையாறுகளில் ஒன்றான கபினியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், அதன் குறுக்கே கட்டியுள்ள அணை நிரம்பி, கடந்த, 15 நாட்களில், 20 டி.எம்.சி., நீர் மேட்டூர் அணைக்கு வந்துள்ளது.நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்த போதிலும், இதுவரை காவிரி நீர் நேரடியாக கைகொடுக்காத நிலையில், கடந்த, 15 நாட்களாக காவிரியின் துணை ஆறான, கபினி கைகொடுப்பதால், மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.தமிழக ஆறுகளில் வறட்சி நீடிப்புதமிழகத்தில் ஒகேனக்கல் கீழ் பகுதியில் உள்ள காவிரியாற்றில் சின்னாறு, பாலாறு, தொப்பையாறு, நாகாவதி ஆகிய நான்கு துணையாறுகள் கலக்கிறது. இந்த நான்கு ஆற்றில் வரும் தண்ணீர் நேரடியாக மேட்டூர் அணைக்கு வந்துசேரும். எனினும், தமிழகத்தில் உள்ள காவிரி துணையாறுகளின் நீர்பிடிப்பு பகுதியில், இதுவரை பருவமழை தீவிரம் அடையவில்லை. இதனால், நான்கு ஆறுகளே தண்ணீரின்றி வறண்டு கிடப்பது குறிப்பிடத்தக்கது.

### சம்பா சாகுபடிக்கு விதை நெல்கிடைக்க நடவடிக்கை அவசியம்

நாமக்கல்: "கர்நாடகாவில் பருவமழை பொழிந்து வருவதால், காவிரியில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. அதனால், சம்பா சாகுபடி செய்வதற்கு தேவையான விதை நெல் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கோரிக்கை எழுந்துள்ளது.கர்நாடகா மாநிலத்தில் நீர்பிடிப்பு பகுதிகளில், பருவமழை பெய்வதால், காவிரி ஆற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. அதன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.குறுகிய கால சாகுபடி நெல் ரகங்கள், தனியார் மற்றும் வேளாண் துறை மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இருந்தும், விதை நெல் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. டெல்டா மாவட்டங்களுக்கு தேவையான அளவு விதை நெல்லை, வேளாண் துறை மூலம் அண்டை மாநிலங்களில் இருந்து தருவித்து, விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

நாமக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) முரளி

கூறியதாவது:மேட்டூர் அணையில் இருந்து, குடிநீர் தேவைக்காக மட்டுமே தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில், தேவையான அளவு விதை நெல் இருப்பு உள்ளது. மாவட்டம் முழுவதும், 136 மெட்ரிக் டன் விதை நெல் இருப்பு உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## தண்ணீர் வரத்து அதிகரிப்பால்தடுப்பணை நீர்மட்டம் உயர்வு

பள்ளிபாளையம்: "காவிரியில் தண்ணீர் வரத்து அதிகரித்து வருவதால், ஓடப்பள்ளி தடுப்பணையில், விரைவில் மின் உற்பத்தி துவங்கும்' என, அப்பகுதி மக்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.பள்ளிபாளையம் அடுத்த ஓடப்பள்ளியில், மின் உற்பத்திக்காக, 490 கோடி ரூபாய் மதிப்பில், தடுப்பணை கட்டப்பட்டது. அந்த தடுப்பணையில், ஒன்பது மீட்டர் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு, 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் மின் உற்பத்தி துவங்கியது.இரண்டு நிலையங்களில், தலா, 15 யூனிட் வீதம், மொத்தம் 30 யூனிட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் போது, உற்பத்தி தடைபடுவதும், தேவையான தண்ணீர் தேக்கி வைக்கும்போது, உற்பத்தி துவங்குவதும் என மாறி மாறி இயங்கி வந்தது.தமிழகத்தில் பருவமழை பொய்த்து போனதால், காவிரியில் தண்ணீர் வரத்து முற்றிலும் குறைந்தது. அதனால், மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவதிலும் தடை ஏற்பட்டது. போதிய தண்ணீர் இருப்பு இல்லாததால், கடந்த, ஆறு மாதத்துக்கு முன், தடுப்பணையில் மின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.மேட்டூர் அணையில் இருந்து பள்ளிபாளையம் ஓடப்பள்ளி தடுப்பணை வரை, சமயசங்கிலி, நெறிஞ்சிபேட்டை, ஒத்தக்கல்குதிரை, பூலாம்பாடி மற்றும் ஓடப்பள்ளி தடுப்பணை உள்பட, ஏழு இடங்களில் தடுப்பணை கட்டப்பட்டு மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.இந்நிலையில், கர்நாடகாவில் பருவமழை பொழிவதால், அங்குள்ள அணைகள் நிரம்பி, உபரி நீர் காவிரியில் திறந்து விடப்படுகிறது. அதன் காரணமாக, மேட்டூர் அணை நீர்மட்டம், 56 அடியாக உயர்ந்துள்ளது. தற்போது, குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, வினாடிக்கு, 3,000 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.ஓடப்பள்ளி தடுப்பணையில், ஐந்து மீட்டர் உயரம் வரை தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

இன்னும், இரண்டு அடி தண்ணீர் தேக்கினாலே, மின் உற்பத்தியை துவங்கி விடலாம். தற்போது, தொடர் மழை பொழிவதாலும், காவிரியில் தண்ணீர் அதிக அளவில் திறந்து விடப்படுகிறது.அதனால், விரைவில் ஒன்பது மீட்டர் தண்ணீர் எட்டும் எனவும், அப்போது, ஓடப்பள்ளி தடுப்பணையில் மின் உற்பத்தி துவங்கும் எனவும் அப்பகுதி மக்கள் எதிர்ப்பார்த்துள்ளனர்.

## வறட்சியை தாங்கும் மல்லிகைவிளைச்சல் அதிகரிப்புவிவசாயிகள் மகிழ்ச்சி

லாலாப்பேட்டை: கடும் வறட்சியைத் தாங்கி, மல்லிகை பூ உற்பத்தி அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.லாலாப்பேட்டைக்கு புகழ் அளிப்பதில் மல்லிகை பூவும் ஒன்றாக விளங்குகிறது. கிருஷ்ணராயபுரம் யூனியனுக்கு உட்பட்ட மாயனூர், கடவூர், கிருஷ்ணராயபுரம், மலைப்பட்டி, லாலாப்பேட்டை, தானியம்பட்டி, குளித்தலை பகுதியான நங்கவரம், வளையப்பட்டி, சூரியனூர் உள்ளிட்ட இடங்களில் தோட்டங்களில் மல்லிகை பயிரிடப்படுகிறது. வறட்சி நிலவும் போதிலும் மல்லிகைப்பூ அதை தாங்கி உற்பத்தியாகிறது.பெரும்பாலும் நாட்டு மல்லிகை ரகமாக குண்டு மல்லிகை இங்கு சாகுபடி செய்யப்படும் பூ, திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், சேலம், மதுரை மார்க்கெட்டுக்கு அனுப்பப்படுகிறது.சிறு மற்றும் குறு விவசாயிகள் மல்லிகை அதிகளவில் சாகுபடி செய்கின்றனர். தற்போது சீசன் தொடங்கி விட்டதால், பூ விளைச்சலும் அதிகரித்துள்ளது. குறைந்த நீரில் பயிரிடப்படும் மல்லிகை, தினமும், 500 முதல் 1000 ரூபாய் வரை விவசாயிகள் லாபம் ஈட்டி வருகின்றனர். உள்ளூர் மார்க்கெட்டில், ஒரு பாக்கெட் மல்லிகை பூ, 10லிருந்து15 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**10.07.2013**

**நெல் மூட்டை விலை குறைவால் விவசாயிகள் அதிருப்தி**

காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் பகுதியில் ஆழ்குழாய் கிணறு வைத்திருப்பவர்கள் நவரை பருவத்தில் நெல் சாகுபடி செய்தனர். இந்த பகுதியில் விவசாயிகள் அதிகம் உள்ளதால் நெற்பயிர் சாகுபடியில் தீவிரமாக விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததாலும், காவிரியிலிருந்து தண்ணீர் மேட்டூருக்கு சரிவர வராததாலும், விவசாய பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் மிகுந்த சிரமங்களுக்கு இடையே பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள் நல்ல விலைக்கு விற்கப்பட்டது. இதை கருத்தில் கொண்டு நவரை பருவத்தில் ஆந்திரா பொன்னி ரகத்தை விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்தனர். ஆனால் இதற்கு வெளி மார்க்கெட் வியாபாரிகள் இடையே குறைந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டதால் அதிர்ச்சி அடைந்தனர். ஜனவரி மாதத்தில் அறுவடை செய்யப்பட்டு சேமித்து வைக்கப்பட்ட ஆந்திரா பொன்னி நெல் ரகத்தையே அதிக விலை கொடுத்து வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். தற்பொழுது மின்சாரம் பற்றாக்குறை, ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு, ஆகியவற்றை சமாளித்து விவசாயம் செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்வது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

**கிராம விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப செயல்விளக்கம்**

கோபி: கோபி அருகே உள்ள குள்ளம்பாளையத்தில், கோவை வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் நவீன தொழில்நுட்பம் குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இளங்கலை இறுதியாண்டு படிக்கும் மாணவிகள் கிராமத்தங்கல் திட்டத்தின் கீழ் கடந்த ஒரு மாதமாக கோபி வட்டாரத்தில் தங்கி கள பயிற்சி பெற்று வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக பல்வேறு கிராமங்களுக்கு சென்று சிறு,குறு மற்றும் பெண் விவசாயிகளிடம் விவசாய சாகுபடி, பொருளாதார நிலை மற்றும் கால்நடைகள் உள்ளிட்ட பல்வேறு விபரங்களை சேகரித்தனர்.
அதன் ஒரு பகுதியாக கோபி அருகே உள்ள குள்ளம்பாளையத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை சாகுபடி குறித்த பல்வேறு நவீன தொழில் நுட்பங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு ஊராட்சித்தலைவர் ஜெகநாதன் தலைமை தாங்கினார். கோபி வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில், சொட்டுநீர்ப் பாசனம், செம்மை கரும்பு சாகுபடி மற்றும் திருந்தியநெல் சாகுபடி உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களையும், மானிய திட்டங்களையும் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினர்.நன்மை செய்யும் பூஞ்சானம் மூலம் விதை நேர்த்தி செய்தல், நூறு புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த வாழை விதை கிழங்கு நேர்த்தி செய்தல், மஞ்சள் விதை கிழங்கு நேர்த்தி, துவரை நடவு செய்தல், கரும்பு விதை கரணை நேர்த்தி செய்தல், நவீன முறையில் பழக்கூழ் செய்தல் உள்ளிட்ட பல்வேறு செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் பரணி, சிசிலியா கார்மல், ராகவி, தரணிப்பிரியா, பிரியங்கா, இந்து மீனா, லூலூ.கே.கே., கோபி வேளாண்மை அலுவலர் ஜெயக்குமார், குள்ளம்பாளையம், கங்கம்பாளையம், நாதிபாளையம், வெள்ளாளபாளையம், பொலவக்காளி பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் செந்தில்முருகன் மற்றும் டான்வா பண்ணை மகளிர் குழுவினர் செய்திருந்தனர்.

**வேளாண் கூட்டுறவு சங்கத்தில் விவசாயிகளுக்கு நீ7 லட்சம் கடன்**

ஆலங்குடி, : ஆலங்குடி அருகே தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு ரூ.7 லட்சம் கடன் வழங்கப்பட்டது.
ஆலங்குடி அடுத்த வடகாடு கூட்டுறவு சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தேர்வு

செய்யப்பட்ட பின்னர், முதல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்க செயலாளர் உதயணன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் ரங்கநாதன் முன்னிலை வகித்தார். கூட்டுறவு சங்கத் தலைவர் சின்னு, வாழை மற்றும் கரும்பு சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ரூ.7 லட்சத்து 86 ஆயிரத்து 900 கடனாக வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சங்கத்தின் பணியாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**விற்பனைக்காக மாதூர் வேளாண் பண்ணையில் பலவகை மீன்குஞ்சு வளர்க்க முடிவு**

காரைக்கால், : மாதூர் வேளாண் அறிவி யல் நிலைய பண்ணையில் அனைத்து குட்டையிலும் பல்வேறு மீன் குஞ்சுகள் வளர்க்க முடிவு செய்துள்ளதாக வாரிய தலைவர் சுரேஷ் தெரிவித்துள்ளார்.
காரைக்கால் அடுத்த மாதூர் வேளாண் அறிவியல் நிலைய பண்ணையை, நிலையத்தின் வாரிய தலைவர் சுரேஷ் ஆய்வு செய்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறும்போது, மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் மீன் வளர்ப்புக்கென 5 குட்டைகள் உள்ளன. இதில் ஒரு குட்டையில் மட்டுமே மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த ஒரு குட்டையில் வளர்க்கப்படும் மீன்களை வைத்தே சுய உதவிக்குழு மற்றும் மற்றவர்களுக்கு மீன் வளர்ப்பு கற்றுத்தரப்படுகிறது. மற்ற 4 குட்டைகள் பயன்பாடு இல்லாமல் உள்ளது. வரும் காலங்களில் 5 குட்டைகளிலும் தண்ணீர் நிரப்பி பல்வேறு மீன்கள் வளர்க்கப்படும். குறிப்பாக, கெண்டை, கட்லா, ரோகு, மிர்கால், வெள்ளிக்கெண்டை உள் ளிட்ட மீன்களை வளர்க் கவும், மேலும், ஒரு குட்டை யில், புதிய வகை கெண்டை யான போட்லா கெண்டை வளர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
பேட்லா கெண்டை உள்பட சுமார் 2 லட்சம் கெண்டைகள் இங்கேயே உற்பத்தி செய்யப்படுகிறது. நிலையத்தின் அனைத்து குட்டைகளிலும் அனைத்து வகை மீன் குஞ்சுகளை வளர்த்து மீன் வளர்ப்போருக்கு மீன் குஞ்சுகளை விற்பனை செய்யவுள்ளோம் என்றார்.

**குறுவை சாகுபடியில் சிக்கனமுறை யுத்திகளை கடைபிடித்தால் நல்ல மகசூல் சிக்கல் வேளாண் அதிகாரி யோசனை**

நாகை, : நிலத்தடி நீரை நம்பி குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள் நீர் பற்றாக்குறையை மனதில் கொண்டு சிக்கன முறை சாகுபடி யுத்திகளை கையாள வேண்டும். சகதியில் நேரடியாக விதைப்பு செய்வதன் மூலம் தண்ணீரை சிக்கனப்படுத்தலாம்.

இதுகுறித்து சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய தலைவர் பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

சேற்றுழவு செய்து நன்றாக சமன் செய்த வயலில் முளைகட்டிய விதைகளை நேரடியாக கையால் விதைப்பு செய்து சாகுபடி மேற்கொள்ளலாம். அல்லது டிரம் சீடர் என்னும் விதைப்பு கருவியை கொண்டு விதைப்பு செய்யலாம். இதற்கு 12&14 கிலோ விதை போதுமானது. விதைப்பதற்கு முன்பாக நீர்கட்டி சேற்றுழவு செய்ய வேண்டும். நிலம் நாற்றங்காலை போன்றே சமன் செய்யப்படுதல் மிகமிக அவசியம். நிலம் மேடு பள்ளமாகவோ, குண்டும் குழியுமாகவோ இருந்தால் நீர் தேங்கி நாற்றுகள் சரிவர முளைக்காமல் இடைவெளி அதிகம் காணப்படும்.

அரைஅடி அகலத்தில் சிறிய வடிகால் வாய்க்கால்கள் நிலத்தின் குறுக்கேயும், 3 மீட்டர் இடைவெளியிலும், வயலை சுற்றி வரப்பின் ஓரத்திலும் அமைப்பது நல்லது. பரிந்துரைக்கப்பட்ட களைக் கொல்லிகளை (ஏக்கருக்கு விதைத்த மூன்றாம் நாள் 35 கிராம் ஆக்சா படையாக்ரில் அல்லது பிரிட்லாகுளோர்+ சேப்ளர் 400 மிலி அல்லது விதைத்த 5ம் நாள் பைரசோசல்பியுரான் 80 கிராம், 20 கிலோ காய்ந்த மணலுடன்) களை முளைக்கும் முன் இட வேண்டும். இதனால் ஆரம்ப காலத்தில் களைகள் முளைக்க விடாமல் கட்டுப்படுத்தலாம். மேலும் களை களை 30 நாளில் எடுக்க வேண்டும். விதைத்த 15ம் நாளில் நெருக்கமாக உள்ள பயிரை களைத்தும், இடை வெளி அதிகமாக உள்ள பகுதிகளில் நட்டு இடைநிரப்பு செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியமான பின்செய் நேர்த்தியாகும்.

பரிந்துரைக்கப்பட்ட மணிச்சத்தை முழு அளவிலும், 25 சதவீதம் சாம்பல் சத்தையும் அடியுரமாக கடைசி உழவின்போது இட வேண்டும். விதைத்த 21ம் நாள்

பரிந்துரைக்கப்பட்ட அளவு தழைச்சத்து, சாம்பல் சத்து இரண்டையும் 25 சதவீதமாக பிரித்து தூர்பிடிக்கும் பருவம், கதிர் உருவாகும் பருவம், கதிர் வெளிவரும் பருவங்களில் இட வேண்டும்.

விதைத்த முதல் வாரத்தில் மண் நனைய நீர் பாய்ச்சினால் போதுமானது. 3ம் நாள் களைக்கொல்லி இடப்பட்டிருந்தால் அதற்கு ஏற்றவாறு நீர் கட்ட வேண்டும். நீரின் ஆழம் பயிரின் வளர்ச்சிக்கேற்ப படிப்படியாக ஒரு அங்குலம் வரை அதிகரிக்கலாம். நேரடி விதைப்பின் மூலம் 20&30 சதவீத நீர் சேமிக்கப்படுவதுடன் நெற்பயிர் 10 நாட்கள் முன்கூட்டியே அறுவடைக்கு தயாராகி விடும்.

எனவே சிக்கனமுறை சாகுபடி யுத்திகளை கையாண்டு நல்ல மகசூல் பெற்று விவசாயிகள் பயனடைய வேண்டும் என்று முனைவர் ராஜேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## குமரியில் சாகுபடி பணிகள் தீவிரம் தெள்ளாந்தி, தெரிசனங்கோப்பில் கன்னிப்பூ நடவு பணி முடிந்தது

பூதப்பாண்டி:குமரிமாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை தீவிர மடைந்து, அணைகளின் நீர்மட்டம் உயர்ந்ததை தொடர்ந்து கன்னிப்பூ சாகுபடி பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. ஏற்கனவே நாற்றங்கால் தயார் செய்திருந்த தெள்ளாந்தி, தெரிசனங்கோப்பு பகுதிகளில் நடவு பணி முடிந்தது.

குமரிமாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை குறைவாக இருந்தது. இதனால் கன்னிப்பூ மற்றும் கும்பப்பூ சாகுபடி பாதியாக குறைந் தது. மேலும் கடந்த முறை கும்பப்பூ சாகுபடி செய்யப்பட்ட போது அணைகளில் நீர்மட்டம் குறைவாக இருந்ததால் தேவாளை, புத்த னாறு, அனந்தனாறு ஆகிய சானல்களில் சுழற்சிமுறை யில் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது.கடைவரம்பு பகுதிகளுக்கு தண்ணீர் சென்று சேராததால் பயிர்கள் கருகின. போதிய தண்ணீர் இல்லாததால் சில பகுதிகளில் விளைந்த நெற்கதிர்கள் பாதி அளவுக்கு மேல் பதராகி போனது. விவசாயிகள் பயிர் செய்ய செலவழித்த தொகையினை கூட பெறமுடியாமல் தவித்தனர்.

இந்நிலையில் குமரி மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் தொடர்ந்து பெய்த தென்மேற்கு பருவமழையால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் நீர்மட்டம் உயர்ந்தது. மழை தொடங்கியதும் தெள்ளாந்தி, தெரிசனங்கோப்பு, பூதப்பாண்டி, சிறமடம் உள்ளிட்ட பகுதிகளில் நாற்றங்கால் தயார் செய்திருந்தனர். கடந்த ஜூன்மாதம் 20ம் தேதி பேச்சிப்பாறையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதில் முன்னமே நாற்றங்கால் தயார் செய்திருந்த விவசாயிகள், அவற்றை நடவு செய்துள்ளனர்.தோவாளை சானல் பகுதியான செண்பகராமன்புதூர், கண்ணன்புதூர், மாதவலாயம், தோவாளை போன்ற பகுதிகளில் கடந்த முறை சுழற்சி முறையில் தண்ணீர் விட்டதால் போதிய அளவு தண்ணீர் சென்று சேரவில்லை. இதனால் அந்த பகுதி விவசாயிகள் நாற்றங்கால் தயார் செய்யாமல் இருந்தனர்.

தற்போது அணையில் நீர்மட்டம் உயர்ந்து, தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் அவர்கள் நாற்றங்கால் தயார் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**அரூர் வாரச்சந்தையில் சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி**

அரூர், : அரூர் வாரச்சந்தையில் சின்னவெங்காயத்தின் விலை குறைந்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

தமிழகம் முழுவதும் சின்னவெங்காயத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வந்தது. கடந்த வாரம் ஒரு கிலோ ஸி80 வரை விற்பனையானது. தற்போது தமிழகத்தின் பல பகுதிகளில் சின்ன வெங்காயம் அறுவடை துவங்கியுள்ளது. இதையடுத்து மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்துள்ளது. தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலிருந்தும் சின்னவெங்காயம் வரத்து துவங்கியுள்ளது. அரூர் பகுதிக்கு ஓசூர், தளி, சூளகிரி ஆகிய பகுதிகளிலிருந்து அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

அரூர் வாரச்சந்தையில் சின்னவெங்காயம் ஒரு கிலோ ஸி40 முதல் ஸி45 வரை விற்பனை செய்யப்பட்டது. விலை அதிகரித்திருந்ததால், கடந்த 2 மாதங்களாக சாம்பாரில் வெங் காயம் சேர்க்காமலேயே சமையல் செய்து வந்த இல்லத்தரசிகள், விலை குறைந்ததால் சின்ன வெங்காயத்தை ஆர்வத்துடன் வாங்கி சென்றனர்.

வரத்து அதிகரித்து உள்ளதால் சின்னவெங்காயத்தின் விலை குறையத்தொடங்கியுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்

**விவசாயிகளுக்கு டெஸ்டிங் மோட்டார் குறைந்த வாடகைக்கு வழங்க கோரிக்கை**

தாராபுரம்: தாராபுரம் பகுதியில் விவசாயிகளுக்கு டெஸ்டிங் மோட்டார்களை குறைந்த விலை வாடகைக்கு வேளாண்துறை அளிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அமராவதி மற்றும் பிஏபி பாசனப்பகுதிகளில் காய்கறிகள் மற்றும் வெங்காயம், மக்காச்சோளம் தென்னை உள்ளிட்ட பயிர் கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இது தவிர கிணற்று பாசனத்தை நம்பி பல ஆயிரம் ஏக்கர் பாசனம் இருந்து வருகிறது. இந்நிலையில் மழை இல்லாததால் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்து போனது. அனைத்து பகுதிகளிலும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. பயிர்களைக் காக்கவும், விவசாயத்தை விடாது மேற்கொள்ளவும் சிறு, குறு விவசாயிகள் கடுமையாக போராட வேண்டிய கட்டாயத்தில் இருந்து வருகின்றனர். இதற்காக விவசாயிகள், தங்கள் ஆடு மாடுகளை கிடைக்கும் விலைக்கு விற்பனை செய்தும், நகைக ளை அடகு வைத்தும் நிலங்களில் போர்வெல் கிணறு களை அமைத்தும் வருகின்றனர் . ஒரு சில பகுதிகளில் 800 அடியிலிருந்து 1000 அடி வரையில் போர்வெல் போடப்படுகிறது.

இருப்பினும் பாசனத்திற்கு தேவையான தண்ணீர் கிடைப்பதில்லை.  விவசாயிகள் புதியதாக போடப்பட்ட போர்வெல்லில் நிரந்தரமாக மோட்டார் பொருத்துவதில்லை. காரணம் 40 ஆயிரம் ரூபாயிலிருந்து 60 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். அப்படி செலவு செய்து மோட்டார் பொருத்திய பிறகு, விவசாயத்திற்கு போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை என்றால், பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும். இதைத் தவிர்க்கும் வகையில் மோட்டார் கம்பெனி மற்றும் பிட்டர்கள் மூலமாக டெஸ்டிங் மோட்டார்களை வாடகை க்கு வாங்கி, புதியதாக போடப்பட்ட

போர்வெல்லில் தற்காலிகமாக பொருத்தி சோதனை செய்து பார்ப்பார்கள். டெஸ்டிங் மோட்டார்களுக்கு ரூ. 6 ஆயிரம் வரையில் வாடகை வசூலிக்கப்படுகிறது. டெஸ்டிங் மோட்டாரை பொருத்தி ஓரிரு நாட்களுக்கு தண்ணீர் எடுத்து சோதித்து பார்த்துவிட்டு. அதன் பிறகு தேவையென்றால் போர்வெல்லில் நிரந்தரமாக மோட்டார் பொருத்துவார்கள்.  தண்ணீர் குறைவாக கிடைத்தால் மோட்டார் பொருத்துவதை தவிர்த்து விடுவார்கள்.

தற்போது பரவலாக விவசாயத்திற்காக அதிக அள வில் போர்வெல் போடப் பட்டு வருவதால் டெஸ்டிங் மோட்டாருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல மாதங்களாக டெஸ்டிங் மோட்டாருக்காக காத்துக்கிடக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் விவசாயிகள் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவசர தேவைக்காக போல்வெல் அமைத்தும் பயன்படுத்த முடியாத நிலை இருந்து வருகிறது. விவசாயிகளின் நலன் கருதி வேளாண் பொறியியல் துறை, டெஸ்டிங் மோட்டார்களை குறைந்த வாடகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில நிர்வாகக்குழு கூட்டம்**

திருச்சி, : தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில நிர்வாக குழு மாவட்ட செயலாளர்கள் கூட்டம் திருச்சியில் நேற்று நடந்தது. மாநில தலைவர் குணசேகரன் எம்எல்ஏ தலைமை வகித்தார். மாநில பொது செயலாளர் துரைமாணிக்கம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து பேசினார்.
அதில் காவிரி பிரச்னையை மத் திய அரசு உடனே தீர்த்து வைக்க வேண்டும். விவசாயிகளுக்கும், விவசாயத்திற்கும் பாதுகாப்பை அதிகப்படுத்த வேண்டும். மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்தை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும். பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயத்திற் கும் நிவாரணம் வழங்க வேண்டும். தமிழக நீர்நிலைகளை சீர் செய்ய மத் திய அரசு ரூ.5 ஆயிரம் கோடி நிதி வழங்க வேண்டும். நதிகள் இணைப்பு திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும். நெல் ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.2,500 ஆக உயர்த்தி வழங்க வேண்டும்.

விளை நிலங்க ளில் எண்ணெய் எரிவாயு குழாய்கள் புதைப்பதை நிரந்தரமாக தடை செய்ய வேண்டும் என்றார்.

மாநில துணை செயலாளர்கள் திருவாரூர் மாசிலாமணி, திருச்சி இந்திரஜித், மாநில துணைத்தலைவர் கள் கிருஷ்ணகிரி லகுமய்யா, ஈரோடு துளசிமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 13 நாளில் 43.37 அடி உயர்வு**



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர் மட்டம் 58.88 அடியாக உயர்ந்துள்ளது. கடந்த 13 நாட்களில் நீர் மட்டம் 43.37 அடி வரை அதிகரித்துள்ளது.

காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவ மழை பெய்து வருவதால், கர்நாடக மாநிலத்தில் உள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. அங்குள்ள முக்கிய அணையான கபினி முழு கொள்ளளவை எட்டி உள்ளதால், அணையின் பாதுகாப்பு கருதி உபரி நீர் திறந்து விடப்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன் கபினி அணையில் இருந்து 50 ஆயிரம் கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 42 ஆயிரம் கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில் கடந்த 7ம் தேதி கபினி அணையில் இருந்து நீர் திறப்பு குறைக்கப்பட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு நேற்று மதியத்தில் இருந்து நீர் வரத்து குறையத்தொடங்கியது. நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 30,362 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 24,250 கனஅடியாக குறைந்தது.

நேற்று முன்தினத்தை விட நீர் வரத்து 6 ஆயிரத்து 112 கனஅடி குறைந்தது. குடிநீர் தேவைக்காக, அணையிலிருந்து 3 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

திறப்பை விட வரத்து அதிகமாக இருப்பதால் அணையின் நீர் மட்டம் மளமளவென உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 56.34 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 58.88 அடியாக உயர்ந்தது. நீர் இருப்பு 23.85 டிஎம்சியாக உள்ளது. கடந்த 25ம் தேதி அணையின் நீர்மட்டம் மிகவும் சரிந்து 15.51 அடியாக இருந்தது. இதையடுத்து நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்ததால் கடந்த 13 நாளில் அணை யின் நீர்மட்டம் 43.37 அடி உயர்ந்துள்ளது. இதனிடையே, நேற்று முன்தினம் முதல் கபினி அணையிலிருந்து 40 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் விரைவில் மேட்டூரை வந்தடையும். இதனால் மேட்டூர் நீர் மட்டம் மேலும் அதிகரிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**சர்க்கரை இறக்குமதி வரி 15 சதவீதமாக உயர்வு**



புதுடெல்லி: சர்க்கரை இறக்குமதி வரியை 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தி மத்திய அரசு நேற்று உத்தரவிட்டுள்ளது. பிரேசில் நாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்ததால் உலக சந்தையில் சர்க்கரை விலை சரிவடைந்துள்ளது. இதனால் இந்தியாவைச் சேர்ந்த சில ஆலைகள் மற்றும் வர்த்தகர்கள் உள்நாட்டில் சர்க்கரையை வாங்காமல் வெளிநாடுகளில் இருந்து கச்சா சர்க்கரையை வாங்கி சுத்திகரித்து இங்கு விற்பனை செய்து வருகின்றன.

இதையடுத்து, உள்நாட்டில் சர்க்கரை விலை குறைந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்க முடியாமல் இங்குள்ள சர்க்கரை ஆலைகள் நெருக்கடியில் உள்ளன. இந்த நிலையை போக்க சர்க்கரை இறக்குமதி வரியை உயர்த்துவது என்று கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது முடிவு செய்யப்பட்டது. அதன்படி சர்க்கரை

இறக்குமதி வரியை 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தி மத்திய அரசு நேற்று உத்தரவிட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**10.07.2013**

**இறக்குமதியாகும் பருப்புக்கு 7.5 சதவீதம் வரி விதிக்க உணவு அமைச்சகம் ஆதரவு**

புதுடெல்லி

மத்திய உணவு அமைச்சகம், இறக்குமதியாகும் பருப்புக்கு 7.5 சதவீதம் வரி விதிக்க ஆதரவு தெரிவித்துள்ளது. வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையம் 10 சதவீதம் வரி விதிக்க பரிந்துரை செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா முதலிடம்

சர்வதேச அளவில் பருப்பு உற்பத்தி, நுகர்வு மற்றும் இறக்குமதியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. உள்நாட்டில் தேவையை ஈடுசெய்யும் பொருட்டு ஆண்டுக்கு 30 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது. 2006–ஆண்டிலிருந்து வரியின்றி பருப்பு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் விலை உயர்வை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



மத்திய அரசு பருப்பு உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.இதனால் பருப்பு உற்பத்தி ஓரளவு உயர்ந்தது. இந்நிலையில் இறக்குமதியாகும் பருப்புவிலை உள்நாட்டுடன் ஒப்பிடும் போது குறைவாக உள்ளது. இதன் காரணமாக உள்நாட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவர்.எனவே விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு இறக்குமதி வரியை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கனடா, மியான்மர்

தனியார் நிறுவனங்கள் மட்டுமல்லாமல் பொதுத்துறை நிறுவனங்களான எம்.எம்.டீ.சி., பி.இ.சி.,எஸ்.டி.சி. மற்றும் நாஃபெட் ஆகிய நிறுவனங்களும் பருப்புகளை இறக்குமதி செய்கின்றன. கனடா, மியான்மர், ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து அதிகளவு பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது.


**வெளிச்சந்தையில், 95 லட்சம் டன் கோதுமை விற்பனை செய்ய திட்டம்**

புதுடெல்லி

இந்திய உணவு கழகம் வெளிச்சந்தையில் 95 லட்சம் டன் கோதுமை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது. இதனால் கோதுமை விலை உயர்வு தடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய உணவு கழகம் டெண்டர் முறையில் குவிண்டால் ஒன்று ரூ.1,500 என்ற விலையில் விற்பனை செய்ய முடிவு செய்துள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

2.51 கோடி டன் கொள்முதல்

நடப்பு சந்தை பருவத்தில் (2013 ஏப்ரல் – 2014 மார்ச்) ஜூலை 8 வரையிலான காலத்தில் இந்திய உணவு கழகம் மற்றும் இதர அரசு அமைப்புகள் சந்தைக்கு வந்த 2.92 கோடி டன் கோதுமையில் 2.51 கோடி டன்னை கொள்முதல் செய்துள்ளன. இந்த அமைப்புகளின் கொள்முதல் 2012–13 பருவத்தில் 3.81 கோடி டன்னாகவும், 2011–12 பருவத்தில் 2.81 கோடி டன்னாகவும் இருந்தது. பொதுவாக ஓராண்டில் கோதுமை கொள்முதல் 2.50 கோடி டன் முதல் 3 கோடி டன் வரை இருக்கும்.



ஜூலை 1 நிலவரப்படி மத்திய மற்றும் மாநில அரசு அமைப்புகளின் உணவு தானியங்கள் கையிருப்பு 7.77 கோடி டன்னாக உள்ளது. இதில் 4.44 கோடி டன் கோதுமையாகவும், 3.33 கோடி டன் அரிசியாகவும் உள்ளது. எனினும் அரசு விதிமுறைகளின்படி ஜூலை 1 அன்று 2.01 கோடி டன் கோதுமையும், 1.18 கோடி டன் அரிசியும் கையிருப்பு இருந்தால் போதுமானது.

தானிய கிடங்குகள் நிரம்பி வழிவதால் ஏற்றுமதி உள்பட வெளிச்சந்தையில் கோதுமை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த நிதி ஆண்டில் மொத்தம் 75 லட்சம் டன் கோதுமை வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிதி ஆண்டில் மொத்த வாடிக்கையாளர்களுக்கு 85 லட்சம் டன்னும், சிறு வர்த்தகர்களுக்கு 10 லட்சம் டன்னும் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2011–12 பருவ மகசூலில் இருந்து 35 லட்சம் டன் கோதுமையை வெளியே கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பஞ்சாப் மற்றும் அரியானா ஆகிய மாநிலங்களில் உள்ள அரசு தானிய கிடங்குகளில் உள்ள பழைய கோதுமை வெளிச்சந்தைக்கு அனுப்பப்படும் என இந்திய உணவு கழகத்தின் தலைவர் சி.விஸ்வநாத் தெரிவித்தார்.

ஏற்றுமதி இலக்கு

கடந்த நிதி ஆண்டில் மொத்தம் 45 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. எம்.எம்.டி.சி., எஸ்.டி.சி. மற்றும் பி.இ.சி. ஆகிய நிறுவனங்கள் தற்போது வரை 43 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்துள்ளதாக தெரிகிறது. தானிய கிடங்குகளில் கடும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் பொது–தனியார் கூட்டுத்திட்டத்தில் சேமிப்பு கிடங்குகளை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. முதல் கட்டமாக 10 மாநிலங்களில் 42 இடங்களில் 20 லட்சம் டன் கொள்ளவு கொண்ட கிடங்குகளை அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாட்டில் சில இடங்களில் இன்று மழை பெய்யும் நீலகிரி மாவட்டத்தில் கனமழை பெய்யும் என வானிலை மையம் அறிவிப்பு**

சென்னை

தமிழ்நாட்டில் சில இடங்களில் இன்று (புதன்கிழமை) மழை பெய்யும் என்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும் என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய சில பகுதிகளில் பெய்துவருகிறது. கடந்த 10 நாட்களுக்கு மேலாக வால்பாறை, கூடலூர் பஜார், கோவை மாவட்டத்தில் சில பகுதிகள் ஆகிய இடங்களில் மழை பெய்துவருகிறது.கர்நாடகம், ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. அதன்காரணமாக அந்த 3 மாநிலங்களிலும் அநேகஇடங்களில் மழை பெய்துவருகிறது.

இன்று மழை பெய்யும்

தமிழ்நாடு புதுச்சேரியில் இன்று (புதன்கிழமை) சில இடங்களில் மழை பெய்யும் என்றும் குன்றுபகுதிகளான நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இன்று கனமழைபெய்யும் என்றும் வானிலை தெரிவித்துள்ளது.மேலும் சென்னையில் சில பகுதிகளில் இன்று மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடியமழைபெய்யும் என்றும் அறிவித்துள்ளது.கடந்த 8–30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேர மழை அளவு வருமாறு:–தேவலா 8 செ.மீ., சின்னகல்லார் 4 செ.மீ., கூடலூர் பஜார் 3 செ.மீ., பெரியார், வால்பாறை, தக்கலை தலா 2 செ.மீ., குளித்துறை, பூதப்பாண்டி, கொளச்சல், பேச்சிப்பாறை, நடுவட்டம், ஆம்பூர், போளூர் தலா 1 செ.மீ.மழை பெய்துள்ளது.

சென்னை

சென்னையில் கடந்த 3 நாட்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது.

**சேலம் மாவட்டத்தில் 6 மையங்களில் விவசாய விலை பொருட்கள் ஏலம்**

சேலம்

சேலம் மாவட்ட விவசாயிகளின் நலனைக் கருதி விவசாய பொருட்கள் ஏலம் மாவட்ட பகுதிகளில் மேலும் 6 இடங்களில் நடத்தபடவுள்ளதாக சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் அரியானூர் பழனிசாமி தெரிவித்து உள்ளார். மேலும் அவர் கூறும் போது, வாழப்பாடி கிளையில் ஒவ்வொறு வாரமும் சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது. இதற்கு முன்பு விவசாயிகள் கொண்டு வரும் மஞ்சள் மூட்டைகள் குடோனில் வைக்க பாதுகாப்பு வசதி இல்லாமல் இருந்தது. தற்போது விவசாயிகள் நல்ல விலைக்கு விற்கும் வரை ஏலத்துக்கு கொண்டு வரும் விவசாய பொருட்கள் எந்த வித செலவும் இல்லாமல் பாதுகாப்பாக வைத்து மறு டெண்டர் காலங்களில் நல்ல விலைக்கு விற்பனை செய்து பயன்பெறலாம். இதேபோல புதன்கிழமை தோறும் வாழப்பாடி பருத்தி ஏலம் நடைபெறும் தலைமையிடமான பள்ளப்பட்டியில் ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற வேலை நாட்களில் நெல், பருத்தி, நிலக்கடலை, மஞ்சள் மற்றும் மக்காச்சோளம் போன்ற விவசாய விளை பொருட்கள் நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுக்கும் பணி சிறப்பாக நடைபெற்றுவருகிறது. மேலும் விவசாயிகளிடம் இருப்புள்ள மஞ்சள் மூட்டைகளை மையத்துக்கு கொண்டு வருவதற்கு சங்க வாகனம் வீடு தேடி வந்து எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சேலம், ஈரோடு உள்பட பல்வேறு மாவட்ட பகுதிகளில் இருந்து மஞ்சள் வியாபாரிகள் பெரிய அளவில் கலந்து கொள்வதால் விவசாயிகளுக்கு கூடுதலாக விலை கிடைக்கும். மேலும் ஏலம் நடைபெற்று 3 மணி நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் இனாம்–பைரோஜி, ஓமலூர், தீவட்டிப்பட்டி, பனமரத்துப்பட்டி, எஸ்.பாப்பாரப்பட்டி, மேச்சேரி ஆகிய இடங்களில் நடப்பாண்டில் பருத்தி, கடலை, மஞ்சள் உள்பட ஆங்காங்கே மகசூல்

செய்யப்படும். விவசாய பொருட்கள் ஏலம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மஞ்சள் பாலிசி ஆலை தொடங்கப்படவுள்ளது. மஞ்சள் விலை ஏறும் வரை அதன் பேரில் அன்றைய விலை நிலவரத்தில் 70 சதவீதம் தானிய ஈட்டு கடன் வழங்கவும் புதிய நிர்வாகம் தீர்மானித்துள்ளது என்றார்.

**சூளகிரி பகுதியில் அவரை விளைச்சல் அமோகம் விவசாயிகள் மகிழ்ச்சி**

சூளகிரி,

சூளகிரி பகுதியில் அவரை விளைச்சல் அமோகமாக உள்ளதை தொடர்ந்து விவசாயி கள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

அவரை விளைச்சல்

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே உள்ளது அனாசந்திரம். இந்த கிரா மத்தை சுற்றி உள்ள பகுதிகளில் அவரை அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அதிக அளவில் விளைச்சல் ஆகி உள்ளது. இதனால் மார்க்கெட்டில் அவரை கிலோ ரூ.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அவரை அதிக விளைச்ச லாலும் அதிக அளவில் மகசூல் கிடைப்பதாலும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து அந்த பகுதி விவசாயிகள் சிலர் கூறிய தாவது:-

விவசாயிகள் பயன்

கடந்த ஆண்டை ஒப்பிடும் போது இந்த ஆண்டு அவரை விளைச்சல் நன்றாக உள்ளது. இதனால் எங்களுக்கு மார்க் கெட்டிலும் நல்ல விலை கிடைக்கிறது. இதன் மூலம் ஏராளமான விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.